# விடுதலைப் புலிகள்

குரல் 2

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு

மே 1984


# தமிழீழத்தில் தர்மயுத்தம்

சிங்கள அரச பயங்கரவாத அதர்மத்திற்கு எதிராக எமது தர்ம யுத்தம்' விரைவில் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. சிங்கள இராணுவ இயந்திரத்தை முறியடிக்க எமது கொரில்லாப் போரணிகள் தயாராகி வருகின்றன. எமது தாயகத்தை ஆக்கிரமித்து, எதுமறியாத எமது மக்களை கொன்றுகுவித்து வெறியாட்டம் நடத்திவரும் சிங்களக் கூலிப்பட்டாளத்திற்குத் தகுந்த பதிலடிகள் கொடுக்கப்படும். கோழைகளான இந்த ஏவற்படைகளை எமது தாய் மண்ணிலிருந்து விரட்டியடித்து தேசிய விடுதலையை நாம் வென்றெடுப்போம் என்பது உறுதி. தேசிய சுதந்திரப் போரை வெற்றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்லவும், யுத்த காலத்தில் பொதுமக்களுக்குத் தகுந்த பாதுகாப்பை அளிக்கவும்எமது விடுதலை இயக்கம் ஒரு பாரிய தேசிய பாதுகாப்புத் திட்டத்தை வகுத்திருக்கிறது. இத்திட்டத்தைச் செம்மையாகச் செயற்படுத்த 'தமிழீழத் தேசிய பாதுகாப்பு நிதி' ஒன்றை ஆரம்பித்திருக்கிறோம். இதற்குத் தமிழீழத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தம்மாலான உதவியையும் ஒத்துழைப்பையும் அளிப்பது அத்தியாவசியமானதாகும்.”

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரபாகரன் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் விபரம் வருமாறு:—

## மக்கள் இயக்கம்

தமிழீழ அரசியல் வரலாற்றிலே என்றுமில்லாத ஒரு சோதனையான, நெருக்கடியான கால கட்டத்தை நாம் எதிர்நோக்கியவண்ணம் இருக்கிறோம். கொடுங்கோன்மையான இராணுவ ஆட்சி எம் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. ஆயுத பலாத்காரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் கொன்றுவிட அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. துப்பாக்கி முனையில் தமிழனை மண்டியிடச் செய்யலாம் என்பதே ஆட்சியாளரின் நோக்கமாக உள்ளது.

இவ்விதம் அரச பயங்கரவாதம் கூர்மையாக்கப்பட்டதால் தமிழினம் இன்று தாங்கொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. உயிரிழப்பும், பொருளிழப்பும், சிறையும், சித்திரவதையுமாக எமது மக்களின் நாளாந்த வாழ்க்கை துன்பமும், துயரமும் தோய்ந்ததாக, பயமும் பதட்டமும் நிறைந்ததாக மாற்றப்பட்டு வருகிறது. எனினும் எமது மக்களிடம் நம்பிக்கை தளர்ந்து விடவில்லை. உறுதிப்பாடு உடைந்து விடவில்லை. ஒரு விடுதலைப் போராட்டப் பாதையில் இவை எல்லாம் தவிர்க்க முடியாத நிகழ்வுகள்.

ஒடுக்கு முறையாளன் தனது இயலாத்தனத்தினால், தனது இறுதி முயற்சியாக ஆயுத பலாத்கார அட்டூழியத்தை அதிதீவிரப்படுத்துவது இயல்பு. எனினும் மக்களை அடிமை கொள்ளும் அவனது இலக்கு ஒரு பொழுதுமே வெற்றி பெறுவதில்லை. அடக்குமுறை எவ்வளவிற்கு அதிதீவிரமாகிறதோ அவ்வளவிற்கு மக்களிடம் புரட்சியுணர்வு பிறக்கிறது. விடுதலை வேட்கை எழுகிறது. விழிப்புணர்வு தோன்றுகிறது. சிங்கள இனவாத ஒடுக்குமுறையானது தமிழீழமெங்கும் புரட்சித் தீயைப் பற்றி எரியச் செய்திருக்கிறது.

இன்று எமது எதிரியான சிங்கள அரசுக்கும், அதன் கூலிப் பட்டாளங்களுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்குவது விடுதலைப் புலிகள் இயக்கமாகும். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள அரச பயங்கரவாதத்திற்குச் சவாலாக ஒரு தீர்க்கமான, உறுதியான ஆயுதப் போராட்டத்தை நாம் நடத்தி வருகிறோம். அன்று அடக்கப்பட்ட தமிழனின் ஆவேசத் தீயாகப் பிறப்பெடுத்த புலிகள் இன்று மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு புரட்சிகர விடுதலை இயக்கமாக, மக்கள் இயக்கமாக வளர்ந்திருக்கிறார்கள்.

எமது ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத எமது எதிரி தனது ஆவேசத்தை அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடுகிறான். பொது மக்களைப்போராளிகளுக்கு எதிராகத்திருப்பிவிடலாமென்பதே எதிரியின் நோக்கம். எதிரியின் இந்த நாசகாரத் திட்டத்தை நாம் நன்கு அறிவோம். அதே வேளை நாம் மக்களின் துன்ப துயரங்களை அசட்டை செய்யவும் முடியாது. இந்தச் சிக்கலை தவிர்த்துக் கொள்ள நாம் ஆயுதப் புரட்சிப் போரை ஒத்திப் போடுவதும் அசட்டுத்தனமாகும். அதற்குள் எதிரி பலம் பெற்றுத் தமிழ் மண்ணில் நிலைத்து விடுவான். எதிரியைத் தூங்கவிடாது தொடர்ந்து தாக்கி அவனது உறுதிப்பாட்டை உடைத்தெறிய வேண்டும். இராணுவ அடக்குமுறையால் தமிழினத்தை ஒடுக்கிவிட முடியாது என்பதை ஆட்சியாளருக்கு உணர்த்தி விட வேண்டும். எதிரி இராணுவத்தைச் சதா பயங்கொள்ளச் செய்து பதட்டநிலையில் வைத்திருக்க வேண்டும். போராட்டத்தை தீவிரமாக்கி எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும்.

எனினும் எமது போராட்டத்தைத் தீவிரமாக்கும் அதே வேளை எமது மக்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே, எமது போராட்டம் மக்களின் பாதுகாப்புத் திட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டதாக அமையப்பெறும். இந்தப் பாதுகாப்புப் போர்முறைத் திட்டத்திற்கு எமக்கு பெருமளவு நிதியுதவி தேவையாகிறது. இதற்காகவே நாம் தேசிய பாதுகாப்பு நிதியை ஆரம்பித்திருக்கிறோம். இந்நிதி தமிழீழத்திலும், வெளிநாடுகளிலும் திரட்டப்படும். எமது இயக்க உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அடையாள அட்டையுடன் மக்களை அணுகுவார்கள். இந்த நிதித் திட்டத்திற்கு மக்கள் தம்மாலான பண உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நிதி பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் ஆயுதம் தரிக்கப்பயன்படுத்தப்படும்.


## களத்திற்கு வருக!

எமது விடுதலையை இலக்காகக் கொண்ட ஒரு தேசியப் போருக்கு மக்களைத் தயாராகுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இது மக்கள் யுத்தம் என்பதால் போராட்டத்தில் மக்களும் பங்களித்தே ஆக வேண்டும். முழு இனமுமே ஒன்றுபட்டு அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராட வேண்டும். இந்த மக்கள் விடு

3ம் பக்கம் பார்க்க

விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும் உறுதியையும் சிங்கள ராணுவத்தால் ஒரு போதும் அழித்து விட முடியாது. நாங்கள் மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும் உன்னதமான லட்சியப் பற்றும் கொண்டவர்கள்.

வே. பிரபாகரன் (Sunday 11 3 84)



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# புலிகளின் குரல்



'தேசியப்பாதுகாப்பு அமைச்சு' என்ற போர்வையில் சிங்கள அரசபயங்கரவாதம் சட்டரீதியான அமைப்பைப் பெற்றிருக்கிறது. இந்த அரசபயங்கரவாத அமைப்பிற்குப் பொறுப்பேற்றிருக்கும் திரு. அத்துலத்முதலிக்கு விடுதலைப் புலிகள் விடுக்கும் ஒரு பகிரங்கக் கடிதம்.

'பயங்கரவாத ஒழிப்பு' என்ற பெயரில் தமிழீழத்தில் ஒரு அராஜக ஆட்சியை நிறுவி, தமிழ் பேசும் மக்கள் மீது நீங்கள் ஒரு யுத்தத்தைப் பிரகடனம் செய்திருக்கிறீர்கள். மனித நீதியின் அடிப்படையில் நியாய பூர்வமான உரிமைகளை வேண்டிநிற்கும் ஒரு மக்கள் சமுதாயம்மீது நீங்கள் ஒரு இனக்குரோதப் போரைத் தொடுத்திருக்கிறீர்கள். உங்களது கூலிப்படைகள் சதா வெறியாட்டம் ஆடிக்கொன்று குவித்துவரும் சாதாரணமக்களை எல்லாம் 'பயங்கரவாதிகள்' எனப் பறைசாற்றி வருகிறீர்கள். வயோதிபர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்களாக எதுமறியாத சாதாரண வெகுசனப் பிறவிகள் அனைவருமே உங்களது அரசைப்பொறுத்தவரை 'பயங்கரவாதிகள்' தான் எனவே நீங்கள் நடத்தும் இந்த யுத்தம் நிராயுதபாணிகளான அப்பாவி மக்களுக்கு எதிரான யுத்தம்; ஒரு அநாகரீகமான சனநாயக விரோத யுத்தம்; ஒரு மக்கள் சமுதாயத்தை ஒழித்துக்கட்டும் இனக்கொலையை இலக்காகக் கொண்ட யுத்தம். ஆகவே தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீங்கள் முன்வைக்கும் 'இறுதித்தீர்வு' இனஅழிப்பு என்பது தெளிவாகிறது. உங்களது இந்த நவின இனஒழிப்புத் திட்டமானது ஹிட்லரின் சூத்திரதாரத்தையும் மிஞ்சி விட்டது. மனித குலத்திற்கு எதிராக நீங்கள் ஒரு மாபெரும் குற்றத்தைப் புரிந்துவருகிறீர்கள். மனித சுதந்திர வரலாற்றின் புனித நூல் ஒன்றை இரத்தத்தால் களங்கப்படுத்திய பழி என்றும் உங்களைச் சார்ந்திருக்கும்.

நாம் ஒன்றை மட்டும் உங்களுக்கு உறுதியாக எடுத்துச் சொல்ல விரும்புகிறோம். உங்களது இந்த மக்கள் ஒழிப்புத் திட்டம் ஒருபொழுதுமே வெற்றியடையப் போவதில்லை. நீங்களும் உங்களைப் பிரதிநிதிப்படுத்தும் இனவாத ஆளும் வர்க்கமும் மீளமுடியாத ஒரு அழிவுப் பாதையில் காலை எடுத்து வைத்திருக்கிறீர்கள். மக்கள் என்ற மலையுடன் நீங்கள் முட்டாள்தனமாக மோதிக் கொள்ள விழைகிறீர்கள். மக்கள் சக்திக்கு எதிராக எந்த ஒரு அரசும் போர்தொடுத்து வென்றது கிடையாது. இந்த வரலாற்றுப் பாடத்தை நீங்கள் மிகவும் கசப்பான முறையில் கற்றுக் கொள்ளப் போகிறீர்கள். எமது மக்கள் சிந்தும் ஒவ்வொரு துளிக் கண்ணீரும், ஒவ்வொரு துளி இரத்தமும் உங்களது அரசுக்கு எதிரான ஆயுதங்களாக உருவெடுக்கும். அநியாயமாகக் கொல்லப்படும் அப்பாவித் தமிழரின் அஸ்தியிலிருந்து ஆயிரமாயிரம் ஆயுதப் போராளிகள் தோன்றுவர்.

உங்களது கொலைகாரத் திட்டமானது தூங்கிக் கிடக்கும் தமிழினத்தைத் தட்டியெழுப்பி விடுதலை வேங்கைகளாக மாற்றி வருகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை போலும். எமது விடுதலை இயக்கம் வெற்றிகரமாக முன்னேறித் [illegible] செல்லும் ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ளத் திராணியற்ற உங்களது கூலிப் பட்டாளம் சாதாரண மக்கள் மீது [illegible] வருகிறது. இது வரலாறு கண்டிராத [illegible] போராத் தாமே புரியாத [illegible] மே உங்கள் இந்த வீரசாகசச் செயலைக் கண்டு வெட்கித் தலைகுனிகிறது. அப்பாவி மக்கள்மீது பழித் தீர்த்துக் கொள்வதால் ஆயுதம் தரித்த ஒரு விடுதலை இயக்கத்தை அடக்கி விடலாமென [illegible] கனவு காண்பது உங்களது கையாலாகாத்தனத்தையே எடுத்துக் காட்டுகிறது. உங்களது இந்தக் கபடத்தனமான போர் யுக்தி எமது மக்களுக்குத் தெரியாதது அல்ல. எமது மக்கள் நல்லெண்ணம் கொண்டவர்கள். மென்மையுள்ளம் படைத்தவர்கள். நாகரீகமானவர்கள். ஆனால் அவர்கள் உங்களைப் போன்று கோழைகள் அல்லர். ஆயுதங்களைக் கண்டு அஞ்சுபவர்களும் அல்லர். உங்களது அதர்மமான போக்கு அவர்களை ஆத்திரமடையச் செய்கிறது. அவர்களது நெஞ்சில் குமுறும் கோபாவேசம் ஒரு நாள் புரட்சிப் பூகம்பமாக வெடித்தே தீரும். அன்று அவர்கள் ஆயுதம் தரித்து உங்களைப் பழிவாங்கத் தயாராக இருப்பார்கள். இன்று நாம் அவர்களது ஆயுதம் தரித்த முன்னணிப் படை. மக்களின் சுதந்திர எழுச்சியை பிரதிபலிக்கும் ஒரு புரட்சிகரச் சக்தி. நாங்கள் மக்களிடம் இருந்து அந்நியப் பட்டவில்லை மக்களுடன், மக்களின் அபிலாசைகளுடன், மக்களின் நாளாந்த துன்ப துயரங்களுடன் சங்கமமாகியிருக்கிறோம். எனவே எந்தவொரு சக்தியாலும், எந்தவொரு சதிகாரக் கும்பலாலும் மக்களையும் எம்மையும் பிரித்துவிட முடியாது. உங்களது மூடத்தனமான போர் யுக்திகள் எமது மக்களிடம் பலிக்கப் போவதில்லை.



எமது மக்களைக் கொன்று குவித்து நீங்கள் நரவேட்டை ஆடி வருவதை நாம் கை கட்டி நின்று பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. நாம் ஆயுதத்தைப் போட்டு விட்டு உங்களிடம் சரணாகதியடையவும் போவதில்லை. நாம் தொடர்ந்து போராடியே தீருவோம். மேலும், மேலும் தீவிரமாகப் போராடுவோம். நாம் உங்களது கூலிப் பட்டாளத்திற்கு ஓய்வு கொடுக்கப் போவதில்லை. எமது பதிலடிகள் இன்னும் பலமானதாக, பாரதூரமானதாகவே இருக்கும். எமது மண்ணிலிருந்து உங்களது ஆயுதப் படைகளை அடித்து விரட்டும் வரை எமது ஆயுதங்கள் ஓயாது அதிர்வேட்டுகளைக் கக்கும். சிங்கள அரசபயங்கரவாத ஏவுநாய்களுக்கு தமிழீழ மண் ஒரு பிணக்குழியாக மாறும்.

எத்தகைய இமாலயத் தடைகள் இருப்பினும் எமது விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் நாம் முன்னெடுத்துச் செல்வோம் என்பதை நாம் உங்களுக்குத் தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகிறோம். நாம் புரட்சிப் போராளிகள். ஒடுக்கப்படும் எமது மக்கள் சமுதாயத்தின் சுதந்திரத்திற்காக, சமத்துவத்திற்காக, தர்மத்திற்காகப் போராடி மாள்வதை ஒரு புனித உயிர்த்தியாகமாக உன்னத ஆன்ம இலட்சியமாகக் கருதுபவர்கள் நாம். எமது தியாகப் போரில் களம் குதிக்க மக்கள் என்ற மகத்தான சக்தி அணி திரண்டு வருகிறது. எமது இலட்சியப் பயணம் நிச்சயம் வெற்றியில் முடியும். அதேவேளை நீங்கள் வரித்திருக்கும் நாசகாரத் திட்டங்கள் படுதோல்வியடையும். உலக மனச்சாட்சி எனும் நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளியாக நிறுத்தப்படுவீர்கள். ஒரு புரட்சி யுகத்தின் மாசு படிந்த மனிதனாக, மக்கள் விரோதியாக உங்களை வரலாறு கண்டித்தே தீரும் ✱

---

புலிகளின் அதிரடித் தாக்குதல்

# ராணுவ வாகனம்

ஸ்ரீலங்கா பாசிஸ அரசு புதிதாக அமைத்துள்ள கஜபா' ரெஜிமண்ட் பிரிவைச் சேர்ந்த இராணுவக் கூலிப்படைகளை ஏற்றிக்கொண்டு ஆயுதப்பாதுகாப்புடன் வந்து கொண்டிருந்த இராணுவ ட்ரக்வண்டி மீது எமது கொரில்லாப் போர் வீரர்கள் நடத்திய அதிரடித்தாக்குதலில் பதினைந்து அரசு படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருபது பேர் மோசமாகக் காயமுற்றனர்.

ஏப்ரல் மாதம் 9-ம் திகதி பிற்பகல் 2 மணி அளவில் யாழ் புகையிரத நிலையத்திலிருந்து 300 யார் தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் அரசபடைகளை நிலைகுலை

## விடுதலைப்புலிகள் கடும் போர்!

யாழ்ப்பாணத்தில் துப்பாக்கி சண்டை!!

யச்செய்துள்ளது. பாதையோரத்தில் பாரிய வெடிகுண்டுகள் கொண்ட வேன் ஒன்றினை நிறுத்தி வைத்து இராணுவ ட்ரக் வண்டி அதனைக் கடக்கும் சமயத்தில் அவை வெடிக்க வைக்கப்பட்டன. இவ்வெடிகுண்டால் ஒரு இராணுவ ட்ரக் வண்டி பூரணமாகச் சிதைக்கப்பட்டதுடன் மற்ற இராணுவ வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன. இராணுவக்கூலிப்படைகளுடன் மோர்ட்டார் ஷெல், வெடிகுண்டுகள் ஆகியவற்றையும் ஏற்றிக்கொண்டு இந்த வாகனங்கள் இராணுவ முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

இராணுவ ட்ரக் வண்டிக்குப் பின்பக்கமாக வந்து கொண்டிருந்த வாகனங்களில் இருந்த கூலிப்படையினர் உயிருக்குப்பயந்து யாழ் புகையிரதநிலையம் வரை ஓடிச் சென்று ரயில் நிலையத்தில் உள்ள மலசல கூடங்களில் புகுந்து உட்புறமாகத்தாளிட்டுக் கொண்டு விட்டனர்.

இத்தாக்குதல் பற்றிய தகவல் கிடைத்ததும் ராணுவத் துருப்புகள் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள், கவசவண்டிகள் சகிதம் ஸ்தலத்திற்கு விரைந்தார்கள். செத்துக்கிடந்த இராணுவப் படையினரின் உடல்களை அப்புறப்படுத்தியதும், வெறித்தனமாக வீதியில் சென்று கொண்டிருந்த அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டு இராணுவ வெறியர்கள் தங்களது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

சிங்கள ராணுவத்தினரின் வெறித்தாக்குதலுக்கு முதலாவதாக இலக்காகியது சரித்திரப்புகழ் பெற்ற அடைக்கல மாதா கோயிலாகும். ரொக்கெட் லோஞ்சர்கள் மூலம் இக்கிறிஸ்தவ தேவாலயத்தினைத் தாக்கி யேசுநாதரின் சுருவத்தினை இந்த வெறியர்கள் உடைத்தனர். கண்ணில் தென்பட்ட கார்களையும் கடைகளையும் வீடுகளையும் சிங்கள வெறியர்கள் தீக்கிரையாக்கினர்.

விடுதலைப்புலிகளின் இந்த அதிரடித் தாக்குதலை பெய்ரூட் பாணியில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் என்று வடமாகாணப் பாதுகாப்புப் படைக் கமாண்டர் கர்னல் ஏ. ஆரியப்பெரும குறிப்பிட்டுள்ளான்.

சிங்கள இராணுவத்தைத் தாக்கி முறியடித்து விரட்டுவதில் விடுதலைப் புலிப்படையினருடன் சாதாரண மக்களும் பெருமளவில் பங்கு கொண்டனர். யாழ் நகரில் ஆங்காங்கு வீதிகளில் பொதுமக்களே தடைகளை ஏற்படுத்தினார்கள். சிங்கள இராணுவ வண்டிகளைக் கண்டதும் வெடிகுண்டுகளை வீசி இராணுவத்தினரைத் துரத்தி அடித்தனர். இந்தத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பல இடங்களில் இலங்கை இராணுவத்தினர் பின்வாங்கி ஓட்டம் பிடித்தார்கள். பொது மக்களுக்கு கைக்குண்டுகளை வழங்கி, அவர்களின் எதிர்த்தாக்குதலை எங்களின் இயக்கமே நெறிப்படுத்திக் கொண்டு மக்களுடன் களத்தில் நின்றது.

ஏப்ரல் 10ம் திகதி காலை மாதாகோயில் தாக்கப்பட்டதைக் கேள்வியுற்ற பொது மக்கள் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் இராணுவக் கூலிகளை எதிர்க்கத் திரண்டனர். ஸ்டான்லி வீதியிலிருந்த பௌத்த விகாரையும் ஆஸ்பத்திரி வீதியிலிருந்த சிங்கள மகாவித்தியாலயமும் தாக்கப்பட்டுத் தீயிடப்பட்டது.

இந்த பௌத்தவிகாரையும் சிங்களமகாவித்தியாலயமும் சிங்கள இராணுவ வெறியர்களின் முகாமாகவே செயற்பட்டு வருகிறது. சிங்கள இராணுவ பிரிகேடியர்களைப் போல ஆயுதந்தாங்கிய விமானப் படையினரின் பாதுகாப்புடன்தான் ஹெலிகாப்டர்கள் மூலம் சிங்கள பௌத்த குருமார்கள் இன்று விகாரைகளுக்கு விஜயம் செய்கிறார்கள்.


வீதிகளில் சுட்டுத்தள்ளிய தமிழர்களின் உடல்களை நாக விகாரைக்கு அருகில்தான் வசதியாக இராணுவ மிருகங்கள் எரித்து மகிழ்கின்றன.

சிங்கள இராணுவ முகாம்களின் மையங்களாகவே இந்த பௌத்தவிகாரையும் சிங்களப் பாடசாலையும் செயற்படுகின்றன.

மார்ச் 20-ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சிவிலுடை அணிந்த ஸ்ரீலங்கா விமானப்படையினர் இருவர் கோண்டாவிலில் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோருகிறார்கள். விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைப் புலனாய்வு செய்ய முயன்றமைக்காகவே இவர்களின் மீது இத்தகைய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.







மார்ச் 25-ம் திகதி பருத்தித் துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்கள பொலிஸ் அதிரடிப் பிரிவினர் மீது எமது கொரில்லா வீரர்கள் மேற்கொண்ட வெற்றிகரமான திடீர்த் தாக்குதலில் ஒரு சார்ஜெண்டும், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். தேசியப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்று உயர்மட்டப் பாதுகாப்பு பந்தோபஸ்து மகாநாட்டிற்குத் தலை

★ ஒரே தாக்குதலில் 15 சிங்கள ராணுவத்தினர் பலி

## புலிப்படையினரின் கொரில்லா தாக்குதல்

மை தாங்குவதற்கு லலித் அதுலத் முதலி யாழ்ப்பாணத்தில் வந்திறங்கிய அரை மணி நேரத்தில் இத்தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து வடக்கில் பல பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றிய சிங்கள பொலிஸார் பாதுகாப்பு மிகுந்த யாழ்ப்பாணம், காங்கேசந்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களுக்கு மாற்றப்பட்டனர். பாவிக்க முடியாத துப்பாக்கிகளுடன் தமிழ் பொலிஸார் மட்டும் இந்த பொலிஸ் நிலையங்களில் காவல் புரியப் பணிக்கப்பட்டுள்ளனர். ✱

1ம் பக்கத் தொடர்ச்சி

தலைப் போரிடை மூன்றணிப் படையாக நின்று எமது விடுதலை இராணுவம் போராடும். ஏனைய விடுதலைக் குழுக்களும் எம்மோடு அணி சேர்ந்து போராடுவதை நாம் விரும்புகிறோம். சென்னையிலிருந்து கொண்டு 'ஒற்றுமை முயற்சி' என்ற போர்வையில் பிரச்சாரப் போராட்டம் நடத்தி காலத்தை விணாக்காமல் போராட்ட களத்திற்கு வருமாறு எனது அன்புத் தோழர்களை அழைக்கிறேன். போர்க்களத்தில் எதிரியை எதிர்கொண்டு போராடும் சூழ்நிலைகள் எமக்குள் ஒருமைப்பாட்டைப் பிறப்பிக்கும். இக்கட்டான சூழ்நிலைகளில் தமிழீழத்திலிருந்து தப்பியோடாமல் மக்களோடு மக்களாக நின்று எதிரியை எதிர்கொண்டு தாக்கி வருவது எமது இயக்கம் என்பதை மக்கள் அறிவார்கள். மக்களை நாம் பாதுகாக்கும் பலத்தை மக்கள்தான் எமக்கு அளிக்க வேண்டும். எமது இயக்கத்திற்கு ஆதரவளித்து. எமது இயக்கத்தின் வழிகாட்டலின் பின்னால் மக்கள் அணி திரள வேண்டும்.

சிங்கள இனவாத அரசும் ஒரு தேசியப் போருக்கு தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஒரு யுத்த நிதியைத் திரட்டி வருகிறது. தேசிய வருமானத்தில் பெரும்பங்கை தனது இராணுவ இயந்திரத்தை நவீனமாக்குவதில் செலவிட்டு வருகிறது. இராணுவத்தின் ஆட்பலத்தை பெருக்கி வருகிறது. இந்நிலையில் தமிழ் பேசும் மக்களும் தமது கடமையிலிருந்து தவறிவிடக்கூடாது. உங்களது விடுதலைக்காக, உங்களது விடிவிற்காக எமது உயிரையே பணயம்வைத்து போராடி வருகிறோம். ஆயிரமாயிரம் இளம் போராளிகள், உங்களது செல்வங்கள் இந்த உரிமைப் போரில் களம்புகத் தயாராகின்றனர். இந்த நெருக்கடியான கால கட்டத்தில் எமக்குக் கை கொடுத்து உதவினால் உங்களது பாதுகாப்பிற்கு அரணாக அமையும்

எமது போராட்டத்தில் நாம் தனித்து நிற்கவில்லை. தமிழக மக்களின் ஒன்றுதிரண்ட மாபெரும் சக்தி எமக்குப் பக்கபலமாக இருக்கிறது. அகில இந்திய மக்களின் அனுதாபமும் எமது பக்கமே இருக்கும். எனினும் எமது விடுதலையைப் பெற்றுக் கொள்ள நாமே போராடி ஆகவேண்டும். முழு உலகமுமே இன்று ஈழத் தமிழினத்தின் நியாயபூர்வமான போராட்டத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. எனவே நாம் எதற்கும் அஞ்சத்தேவையில்லை. அழிவுகள் ஏற்படாத போராட்டங்களே இல்லை. அழிவிலிருந்து ஆக்கம் பிறக்கிறது. நாம் சுதந்திரமாக வாழ வேண்டுமென்றால், நிம்மதியாக வாழவேண்டுமென்றால், தனியரசை அமைத்து தன்மானத்துடன் வாழவேண்டுமென்றால் நாம் போராடியே தீர வேண்டும். எத்தனை தியாகங்களைப் புரியவும் தயாராக வேண்டும். வரலாறு யுத்தமாக புரட்சியாக வெடிக்கிறது. அந்த யுத்தம் தர்மத்தின் சார்பாக வெற்றிபெறும். எமது தேசிய விடுதலை யுத்தமும் வெற்றி பெறுவது திண்ணம். ஏனெனில் தர்மம் எமக்கு சார்பாக நிற்கிறது. ●

செந்தோழர்கள், செந்தணல், சிவப்புநிகழ்வு, செம்பொறிகள் சிவந்த விழிகள், சிவந்த வணக்கங்கள், செந்தளம் சிவப்பு ரத்தம், சிவந்த வசந்தோதயம், செவ் விழிகள், சிவந்த கண்கள், செஞ்சிந்தனை, செந்தோழர்கள் செம் முழக்கம், செம் பத்திரிகை, செம் பேட்டி, சிவந்த கண்ணீர் செங் கனவு, செங் குரல், செஞ்சூரியன், செந்நிலவு, செஞ்சிவப்பு, செம்பொய்கள் செந்தணல், செம்பொய்கள்

செந்தோழர்கள், செந்தணல், சிவப்புநிகழ்வு, செம்பொறிகள் சிவந்த விழிகள், சிவந்த வணக்கங்கள், செந்தளம் சிவப்பு ரத்தம், சிவந்த வசந்தோதயம், செவ் விழிகள் சிவந்த கண்கள், செஞ்சிந்தனைசிவப்புநிகழ்வு, செம் முழக்கம், செம் பத்திரிகை, செம் பேட்டி, சிவந்த கண்ணீர் செங் கனவு, செங் குரல், செஞ்சூரியன், செந்நிலவு, செஞ்சிவப்பு, செம்பொய்கள் செந்தளம் செம் முழக்கம்,

செந்தோழர்கள், செந்தணல், சிவப்புநிகழ்வு, செம்பொறிகள் சிவந்த விழிகள், சிவந்த வணக்கங்கள், செந்தளம் சிவப்பு ரத்தம், சிவந்த வசந்தோதயம், செவ் விழிகள், சிவந்த கண்கள், செஞ்சிந்தனை, செங் கனவு, செம் முழக்கம், செம் பத்திரிகை, செம் பேட்டி, சிவந்த கண்ணீர் செங் கனவு, செங் குரல், செஞ்சூரியன், செந்நிலவு, செஞ்சிவப்பு, செம்பொய்கள் சிவந்த வசந்தோதயம் சிவப்பு

● மக்களை வெறும் பார்வையாளராகவும் தம்மை கதாநாயகர்களாகவும் கருதும் வீரசிகாமணிகள் அவர்கள் எவ்வளவு உறுதியும் விடுதலை உணர்வும் உள்ளவர்களாக இருப்பினும் யுத்தத்தில் வெற்றி பெற முடியாது.

—செந்தணல் (தை 1984)

● இராணுவ நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செய்வதால் மட்டும் மக்களை அணி திரட்ட முடியும் என நினைப்பது கற்றுக் குட்டித் தனவாதத் கண்ணோட்டமாகும். இது இராணுவ நடவடிக்கை என்பது மட்டுமே புரட்சியாகிவிடும் என்ற குருட்டுவாதச் சிந்தனை முறையின் விளைவாகும்.

தாக்குவது, பின் மறைந்து கொள்வது, எதிரிக்குத் தன்னைத் தயார் படுத்தும் கால அவகாசம் அளித்து விட்டு பின் மறுபடியும் தாக்கி, விட்டுமறைவது என்னும் யுத்ததந்திரம் குருட்டுத்தனமானது.

● "மறைந்திருந்து தாக்கு; பின் ஓடு", "தனி நபர்களை அடித்து விழ்த்து: பிறகு மறைந்து கொள்ளு" என்ற வடிவத்தில் மட்டுமே நிகழ்ந்த ராணுவ நடவடிக்கைகள்......

—ஈழ முழக்கம் (செப்-அக், 1983)

● ".........சில தனி நபர்கள் அல்லது சிறு 'குழுக்கள் மேற்கொள்ளுகின்ற துணிச்சல்கரமான, பயங்கரமான சில நடவடிக்கைகளைப் பெரும் சாகசங்களாக இத்தொடர்புச் சாதனங்கள் காட்டி வருகின்றன. முதலாளித்துவத் தொடர்புச் சாதனங்களின் இந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கையானது மக்கள் மனதைச் கலபமாகக் கவர்ந்து விடுகிறது. ஒரு போராட்டத்தின் போது மக்களை, சினிமா பார்க்கின்ற சர்க்கஸ் பார்க்கின்ற ரசிகர் கூட்டம் போல் ஆக்கிவிடுகிறது. இதனால் துணிச்சல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அந்நபர்களும் மக்களைப்பற்றிய சரியான நிலைப்பாட்டிற்குத் தம்மை வளர்த்தெடுத்துக் கொள்ளாமல், அவர்கள் தம்மைப் பெரும் சாகச வீரர்களாகக் கற்பனை செய்துக்கொண்டு இருக்கிற ஓர் நிலையை உருவாக்கி மக்களிலிருந்து தம்மைத் தனிமைப் படுத்திக் கொள்கிறார்கள். மக்களின் கண்ணுக்குத் தெரியாமல் ஒளித்துத் திரிவதே சரியான அரசியல் என்றும் அவர்கள் கருதிக்கொள்கிறார்கள்.

—செந்தணல் (10-1-84)

**மா**ர்க்ஸியக் கோட்பாட்டில் வழி நடத்தப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ராணுவ நடவடிக்கைகளை தனி நபர் சாகசங்களாகக் கருதி தங்களது சஞ்சிகைகளில் பெருங்குரலில் ஒலமிடும் இவர்கள் யார்?

மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பி இந்தியக்கரைக்கு வந்து சேர்ந்த வியர்வை காய்வதற்கு முன்பே தமிழ்நாட்டின் சகல முதலாளித்துவப் பத்திரிகைகளையும் சந்தித்து புகைப்பட சகிதம் பேட்டியும் கொடுத்து அறிக்கைகளும் விட்ட 'EPRLF' செந்தோழர்கள் இவர்கள்!

மட்டக்களப்புச் சிறைச்
சம்பவத்தைப் பற்றி,

"ஒரு சிறகசைப்பில்—
மட்டுநகர்
சிறைமுகாம் பஸ்பமாகியது"
என்றும்,
'சிறைமீட்டோம் தோழர்களை
இப்போ
யார் நாங்கள் எனப் புரிவீர்!"
(ஹஹ்...ஹஹ்...ஹா...)—

(இது ஒரு செஞ்சிரிப்பு) என்றும் இந்தச் செந்தோழர்கள் எழுதிக் குவித்துள்ள கவிதைகள் அல்லது அறிக்கைகளில் வெளிப்படுவது வீரசாகசங்கள் அல்லாமல் வேறு என்னவாம்?

நாங்கள் கூடச் சொல்ல வேண்டாம். இந்தச் செந்தோழர்களின் சிறை உடைப்பு நிகழ்ச்சியைப் பற்றி தமிழகத்திலிருந்து வெளியாகும் 'முரசொலி'(10-10-83) குறிப்பிடுவதைப் பாருங்கள்:

ஜேம்ஸ்பாண்டைப் போல தாங்கள் செய்த வீரசாகசத்தைப் பற்றிக் கூறும் போது அவர்களுடைய "–'-களில் ஒளி வீசியது".

தமிழ்நாட்டின் பிரபல தினசரி பத்திரிகையான 'தினத்தந்தி'(10-10-83) இந்தச் செந்தோழர்களின் வீர தீர பிரலாபத்தைப் பற்றி எழுதுவதைப் பாருங்கள்.

'தமிழ்க்கைதிகளை அவர்கள் விடுவித்த சம்பவத்தை நேரில் கேட்டபோது 'ஜேம்ஸ் பாண்டு' ஆங்கில சினிமா படங்களில் வரும் தீர செயல் போல அமைந்தது தெரிய வந்தது"

மற்றுமொரு பத்திரிகையான "மாலைமலர்" (12-10-83) இந்தச்செந்தோழர்களின் பேட்டியை "பரபரப்பு பேட்டி" எனவே தலைப்பிட்டு வெளியிட்டது.

கும்பகோணத்திலும் சென்னையிலும் நெய்வேலியிலும் போய் நின்று கொண்டு மாறி மாறிப் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துப் பேட்டி கொடுத்த போது தங்களின் 'செந்தளத்தில்' குறிப்பிட்ட 'முதலாளித்துவத்தொடர்புச் சாதனங்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கை' விவகாரம் எல்லாம் செந்தோழர்களுக்கு வசதியாக மறந்து போய் விட்டது.

அதுவும், செந்தோழர்கள் ஒரு சொட்டு ரத்தம்கூடச் சிந்தாமல் தப்பித்த கதையை ஜூனியர் விகடன் (19-10-83) பத்திரிகைக்கு விபரித்திருக்கும் பாங்கு இருக்கிறதே. அது உண்மையில் மக்களைச் சினிமா பார்க்கின்ற—சர்க்கஸ் பார்க்கின்ற ரசிகர் கூட்டம் போல்தான் ஆக்கிவிடுகிறது.

'EPRLF' என்ற இந்த செங்குழுவின் சார்பில் பேட்டி கொடுக்கும் செந்தோழர் டக்ளஸ் என்கிற தேவானந்தன் ஜூனியர் விகடனுக்கு மட்டக்களப்புச் சிறை மீட்புப் படலம் பற்றி விபரிப்பது ஒருபுறம் இருக்கட்டும்.

அப்பாவி நிருபருக்குதான் எதற்காக கைது செய்யப்பட்டேன் என்ற அடிப்படை விஷயத்திலாவது ஒரு உண்மையைச் சொல்லியிருக்க வேண்டாமா?

பொய்யின் புதல்வர்களே! உண்மை எத்தனை நாளைக்கு தூங்கும் என்று கணக்குப் போட்டு வைத்திருக்கிறீர்கள்?

திருக்கோயில் வங்கியைக் கொள்ளையடித்து விட்டு ஓடும் போது வங்கி மானேஜராலும் மற்றும் கிராம மக்களாலும் பிடிபட்டு, பின் மக்களால் (மக்களே தங்கள் ஆசான்கள் என்று செந்தோழர்கள் அடிக்கடி சொல்வது வேறு விஷயம்) பொலிசாரிடம் ஒப்புவிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்ட டக்ளஸ் என்கிற தேவானந்தன் பத்திரிகை நிருபருக்குப் பேட்டிக் கொடுத்தபோது, தான் 'புரட்சிகரமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கைது செய்யப்பட்டதாகப் பத்திரிகை நிருபருக்கு விடுத்த 'கப்ஸா' இருக்கிறதே' அபாரம்!

இவ்வளவையும் செய்து விட்டு மறுபுறம், 'தொழிலாளி' 'விவசாயி வர்க்கத்தலைமை, 'முதலாளித்துவத் தொடர்புச் சாதனத்தின் எதிர்ப்புரட்சி நடவடிக்கை;' 'மக்களை சினிமா பார்க்கிற ரசிகராக மாற்றும் துணிச்சல் நடவடிக்கை' என்றெல்லாம் தங்களின் செம்பத்திரிகையிலே சிவப்புச்சிவப்பாய் எழுதும் தத்துவம் இருக்கிறதே, அதற்கு பெயர்— அற்புதம்!

"உண்மையில் நாமே மக்கள் மத்தியில் இருக்கிறோம்" என்று தங்களின் பத்திரிகையில் பிரகடனம் செய்யும் இந்த 'EPRLF' செந்தோழர்கள் சிறையிலிருந்து தப்பியதும் காடு, மேடுகளில் ஒளிந்து கிடந்து ஒருவர் கண்ணிலும் படாது தமிழ்நாட்டுக்குப் போய்ச் சேர்ந்த பிறகும்கூட "சென்னையிலிருந்து 200 மைல் தொலைவில் ஒரு மறைவிடத்தில் சில பத்திரிகையாளர்களை நள்ளிரவில் சந்தித்துக்" கொண்டு, மறுபக்கம் செந்தணல்பத்திரிகையில், 'மக்களின் கண்ணுக்கு தெரியாமல் ஒளித்துத் திரிவதே சரியான அரசியல் என்றும் அவர்கள் (அதாவது, நாங்கள்) கருதிக் கொள்கிறார்கள்' என்று பிறவிடுதலை இயக்கத்திற்குக் கூசாமல் போதனை செய்ய முன்வருகிறார்களே, அதற்குப் பெயர்—

கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்!

உண்மையில் மக்கள் மத்தியில் இவர்கள் இருப்பவர்களாக இருந்திருந்தால் சிறையிலிருந்து தப்பியதும் தமிழீழ மக்களிடமே நேராகப் போயிருக்க வேண்டும். அவர்களோடு ஐக்கியமுற்று தொழிலாளி-விவசாயி வர்க்கத்தலைமையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். இதை விட்டுவிட்டு ஒளிந்துக் கிடந்து தமிழ்நாட்டிற்கு ஓடிப்போயிருக்கக்கூடாது! தமிழ்நாட்டிற்கு ஓடிப்போய் 'தினத்தந்தி'க்கும், 'முரசொலி'க்கும், 'மாலைமலரு'க்கும், 'எதிரொலி'க்கும், 'மக்கள்குரலு'க்கும், 'ஜூனியர் விகடனு'க்கும் அவசரமாய்ப் பேட்டிக் கொடுக்கச் சொல்லி இவர்களின் மக்கள் ஆசான்கள் இவர்களை எப்போது அனுப்பினார்கள் என்று தெரியவில்லை.

போராட்ட களத்தை விட்டு, மக்களின் கண்ணுக்குத் தெரியாமல் தமிழ்நாட்டில் திரிவது செந்தோழர்களின் பாஷையில் எப்படி சரியான அரசியலாகும்?

பத்திரிகையாளர்கள் விடியற்காலையில் புறப்பட ஆயத்தமான போது செந்தோழர் ஒருவர் பின்வருமாறு கேட்டுக் கொள்கிறார்:

"எங்கள் படங்களை வெளியிட வேண்டாம். வெளியிட்டுத்தான் ஆகவேண்டும் என்றால் கண்களை மறைத்து விடுங்கள் அடையாளம் தெரிய வேண்டாம்"

அடையாளம் தெரியாமலேயே ஒளிந்து திரிய வேண்டும் என்று நினைக்கிற இந்த வீரர்கள் மற்ற இயக்கத்தைச் சார்ந்தவர்களை நோக்கிக் கை வீசுவது பேதமையின் பாற்படும்.

இவர்களின் எழுத்துக்கும் செயலுக்கும், கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையிலான இந்தப் பித்தலாட்டம் ஏன் ஏற்படுகிறது?

இவர்களுக்கு மார்க்ஸியச் சிந்தனை குறித்தோ, மார்க்ஸியத்திற்கும் தேசிய இனப் பிரச்சினைக்கும் இடையிலான தொடர்பு பற்றியோ, தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஆயுதப்போராட்டத்தின் பங்கு பற்றியோ, கொரில்லாப் போர் முறையின் நுணுக்கம் பற்றியோ, நீண்ட காலக் கொரில்லாப் போர் முறையைத் தேசிய விடுதலைக்கான மக்கள் யுத்தமாக விரிவடையச் செய்யும் தேவை குறித்தோ எதிலும் தெளிவில்லை. கிளிப்பிள்ளைகளைப் போல அர்த்தம் விளங்காமல் மார்க்ஸியச் சொற்களை உதிர்க்கிறார்கள். மார்க்ஸியக் கோட்பாட்டை எதார்த்த நிலைமைகளுக்கேற்பப் பிரயோகிக்கும் ஞானமோ, நடைமுறை அநுபவமோ செந்தோழர்களிடம் இல்லை.

"சிவந்த விடியலின் வரவுக்காய் இடிவெறி மேகங்கள் இடிக்கப்படும்" என்றும் "அக்கினிப்புறுக்கள்" "தகிக்கும் தணல்கள்" என்றும் இந்தச் செந்தோழர்கள் எழுதிவைத்திருக்கிற கவிதை வரிகளுக்கு எப்படி இவர்களுக்கு விளக்கம் தெரியாதோ அதே போல, "எமது 'EPRLF' துப்பாக்கிக்குழாய்களூடாகவே ஸ்ரீலங்காவின் படுகொலைவாதிகளுடன் பேச விரும்புகிறது. ஏனெனில் எமது மக்களிடம் ஆக்கிரமிப்பாளர்கள் பட்ட கடனை, இரத்தக்கடனை நாம் தீர்க்க வேண்டியுள்ளது" என்று அவர்கள் எழுதுவதற்கும் விசேஷ அர்த்தம் எதுவும் இல்லை. வெறும் சிவப்பு ரத்தம் துப்பாக்கிக்குழாய் வார்த்தை ஜாலங்கள்!

தமிழீழத்தின் யதார்த்த நிலைமைகளையும் விளங்காமல், மார்க்ஸியக்கோட்பாடுகளையும் ஒழுங்காகக்கிரகிக்காமல் வெறும் சிவப்பிலேயே குளிர்காய முனைகிறார்கள் இந்தச் செந்தோழர்கள். ●

# உதயத்தின் அமைதியில்

Adapted from the Russian Novel 'Dawns are Quiet Here' written by Boris Vasilyev.

**1942.** இரண்டாம் உலகப் போரின் உக்கிரமான காலம். சோவியத்தின் 171-வது இருப்புப் பாதை கிளை நிலையத்தில் எஞ்சியிருப்பவை பனிரெண்டு வீடுகள். பண்டகசாலை, தீயணைப்புக் கொட்டில் மற்றபடி இரவு மேற்கிலிருந்து பீரங்கிகளின் பெருங்குரல்கள் வந்தன. பகலிலோ ஜெர்மானியரின் விமானங்கள் ஹூங்கரித்துப் பறந்து கொண்டிருந்தன. போரின் உக்கிரம் இன்னும் இங்கு கவிந்து ஆட்கொள்ளவில்லை. அதிகாலை, உறைந்து கிடந்த நிசப்தத்தில் வந்து போன சுவடின்றி கோலோச்சிக் கொண்டிருந்தது.

கிளை நிலைய சார்ஜண்டு மேஜர் வஸ்கோவ் தன் படைப் பிரிவுக்கு புதிய ஆட்களைக் கோரியிருந்தான். ஆனால், ஒரு புலர் காலையில் வந்து நின்ற புதுப் படைப் பிரிவைக் கண்டு திகைத்துப் போனான். அத்தனை பேரும் பெண்கள். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தும் கூட அவர்கள் பெண்களாகவே இருந்தார்கள். வஸ்கோவ் செய்வதற்கு இனி ஒன்றுமில்லை. வேண்டுமானால் கடுகடுக்கலாம். படையின் தலைவி கிரியானவா தங்களை விமான எதிர்ப்புப் படையின் ஒரு பிரிவு என்று அறிவித்தாள்.

எந்தவித புது அர்த்தங்களுமற்று நாட்கள் சோகை பிடித்து நழுவிக் கொண்டிருந்தன. படைப் பிரிவுப் பெண்களோ கும்மாளமிடுவதும், வெயில் காய்வதும், மேலே பறக்கும் ஜெர்மன் விமானத்தைத் தாக்குவதுமாய் இருந்தனர். வஸ்கோவ் அவ்வப்போது கட்டளைகள் இடுவான். கடுகடுப்பான். எப்போதாவது புன்னகைப்பான். ஒரு சார்ஜண்டு மேஜரின் லட்சணங்கள் இவைதான் என்பதில் அவனுக்கு எந்தவித அபிப்பிராய பேதமும் இல்லை. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ராணுவ விதிகள். ராணுவ அதிகாரிகள். வஸ்கோவ் அதிகம் படித்தவனில்லை. எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து இளவயதிலேயே குடும்ப பாரம் சுமந்தவன். காடுகளிலேயே வளர்ந்து ஆளானவன். அப்பாவை அடித்துக் கொன்ற கரடி இவனது படிப்பையும் கொன்று விட்டது. பின் ராணுவப் பயிற்சி; பின்லாந்து போரில் செய்த சாகசத்தால் சார்ஜண்டு மேஜர் பதவி. வஸ்கோவின் மனைவி குழந்தை ஒன்றைப் பெற்றுவிட்டு செத்தபோது வஸ்கோவுக்கு முதல் அறை விழுந்தது. குழந்தை மறுவருடம் செத்ததும் இரண்டாவது அறை. அதன் பிறகு வஸ்கோவ் புன்னகை இழந்தான். ராணுவ விதிகளைத் தொழப் பழகிக் கொண்டான்.

ஒரு அதிகாலைப் பொழுதில் ரீதா அஸ்யானினுவின் துப்பாக்கிக்கு கூட வாய்ப்புக் கிடைத்தது. வானத்தில் ஜெர்மானிய விமானம் வட்டமிட்ட போது அஸ்யானினுவின் துப்பாக்கி அதைத் துளைத்துச் சிதைத்தது. சுடப்பட்டதும் அதிலிருந்து ஜெர்மானியன் பாராசூட்டில் குதித்துப் பறந்தான். அஸ்யானினுவின் துப்பாக்கி வாளாயிருந்தது. மற்ற படைப் பெண்கள் கத்தினர். 'சுடு... ரீதா... சுடு...' அஸ்யானினு பேசவில்லை. தரை இறங்கிய ஜெர்மானியன் பாராஷூட்டைக் கிழித்த மறுகணம் அஸ்யானினுவின் துப்பாக்கி பேசியது. அந்த ஜெர்மானியன் சதைத் துண்டங்களாக சிதைந்த போதும் கூட அவள் கண்கள் வெறுமை கொண்டிருந்தன. போர் துவங்கிய இரண்டாம் நாள், கமாண்டராய் பணியாற்றிய அவள் கணவன் கொல்லப்பட்ட போது, குடும்பம் சிதைந்து நொருங்கிய போது ஏற்பட்ட வெறுமை அது. இயல்பாகவே அமைதியான குண விசேஷம் கொண்டவளுக்கு இந்த வெறுமை மேலும் இறுக்கமளித்தது. எப்போதாவது வந்துபோகும் புன்னகை கூட அரிதானது. எஞ்சியதெல்லாம் சூனியமும், பழிவாங்கும் உக்கிரமும் மட்டுமே. ஒவ்வொரு நாள் இரவும் அஸ்யானினு படை முகாமிலிருந்து கிளம்பி பக்கத்து கிராமத்தில் தனது தாயுடன் இருக்கும் மகனைப் பார்க்கும் அந்த சில கணங்களில் மட்டுமே அவை ஒளிர்ந்தன. புன்னகைத்தன.

இரவு ரொம்பவும் நிசப்தமாகவும் சந்தோஷம் தருவதாகவும் இருந்தது. மிதிபட்டு சரசரக்கும் சருகுகளின் சப்தத்தில் ரசனை கொள்ள முடிந்தது. பிள்ளையைக் காணப் போகும் உற்சாகம் மனசில் வழிய அஸ்யானினு இரவை லயித்து அனுபவித்து நடந்து கொண்டிருந்தாள். ஆனால் அத்தனை சந்தோஷமும் அற்ப கணத்தில் மரித்துப்போயின. ஒரு திருப்பத்தைக் கடந்த அவள் உறைந்து நின்றுவிட்டாள். தானியங்கித் துப்பாக்கிகளுடன் இரண்டு ஜெர்மானியர். எதிரிகள். அவர்கள் கைகளில் வெடிமருந்துப்பைகள்.

மேல்மூச்சு வாங்க அவள் இந்த விஷயத்தை வஸ்கோவிடம் அறிவித்த போது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவளிடமிருந்து மேலும் தகவல்களை கிரகித்து மூளையைக் கசக்கிக் கொண்டான். எதற்காக எதிரிகள் வந்திருக்கின்றனர். திடீரென அவன் முகம் அதிர்வு கலந்த மின்னொளியால் பிரகாசித்தது. சினியூஹின் மலைக்கப்பாலிருந்த இருப்புப் பாதை ஜெர்மானியர் இலக்கு; அதை உடைத்து சோவியத் படையை ஸ்தம்பிக்க வைப்பது அவர்கள் திட்டம். கிலி உள்ளத்தில் நிறைந்த போதும் சுதாரித்துக் கொண்டு ஐந்து பேர் கொண்ட வேட்டைக் குழுவை உடன் கூட்டினான். அஸ்யானினு, லிசா, ழேனியா, காலியா, குர்விச், சார்ஜண்டு மேஜர் வஸ்கோவ்.

வஸ்கோவ்முன் இருபெரும் பிரச்சினைகள் எழுந்து நின்றன. போதிய யுத்த அனுபவம் வாய்க்கப் பெறாத, உக்கிரமான போர்க்களம் காணாத பக்குவம் குறைந்த பெண்கள்; ஆயுதமோ பழைய ரகத் துப்பாக்கிகள், ரவைகள், இரு கைக்குண்டுகள் அவ்வளவுதான். ஆனால் எதிரியோ விசேஷமான தானியங்கித் துப்பாக்கிகளும் வெடிமருந்தும் கொண்ட பலசாலி. ஆனாலும் வஸ்கோவ் நம்பிக்கையோடிருந்தான். எதிரிகளின் பலம் ஒன்றே அவனுக்கு சவால். எதிரிகளுக்கோ சூழல் மொத்தமுமே சவால்.

வஸ்கோவ் மனதிற்குள்ளேயே திட்டம் தீட்டினான். தனது படை சதுப்பு நிலக்காடுகளில் இறங்கி குறுக்கு வழியில் சினியூஹின் மலைக்குன்றுகளை அடைந்து எதிரிகளுக்காக முன்கூட்டியே காத்திருக்க வேண்டும். ஜெர்மானியருக்கோ இடம் புதிதாகையால் சுற்று வழியில்தான் வர முடியும். உத்தரவுகளையும் திட்டத்தையும் அனைவருக்கும் வழங்கிய பின் படை புறப்பட்டது. சதுப்பு நிலம் நோக்கி.

சதுப்பு நிலம் கடப்பதற்குப் பெரிய சவாலாக இருந்தது. வஸ்கோவ் வழிகாட்ட படையினர் அவனைத் தொடர்ந்தனர். பாதை மாறி ஓரடி வைத்தாலும் சகதியின் பசிக்கு பலியாக வேண்டும். கத்திமேல் நடப்பதைப் போன்ற அவஸ்தை மிகுந்த பயணம். இருந்தபோதிலும் தாய்நாட்டைக் காக்க சதியை முறியடிக்க என்ற இலட்சியம் அவர்கள் மனதிற்குப் புதுஉரம் தந்து கொண்டிருந்தது.

வஸ்கோவை அசர வைக்கும் அளவுக்கு அவர்கள் தீரத்துடன் சதுப்பு நிலத்தைப் பின் தள்ளி முன்னேறினர்.

ஆனால் வோப் ஏரிக்கரையை அடைந்து எதிரிகளைக் கண்காணித்த வஸ்கோவுக்கு பேரிடி தலையில் இறங்கியது. அவர்கள் நினைத்தது போல் ஜெர்மானியர்கள் இரண்டு பேர் மட்டும் அல்ல. பதினாறு பேர். அவ்வளவு பேரும் நவீன ஆயுதம் தாங்கிய பலசாலிகள். வஸ்கோவ் இப்போது தான் செய்யக்கூடியவை இரண்டே விஷயங்கள் என்பதை உணர்ந்தான். ஒன்று எதிரிகள் தங்களை தெரிந்து கொள்ளாதிருக்கும் பொருட்டு அவர்களின் கவனத்தைத் திசை மாற்றுவது. மேலும் அவர்களை ஏரியில் இறங்கவிடாது மலைக்குன்றுகளை சுற்றி வரும்படி அவர்கள் பயணத்தை நீட்டுவது. இரண்டு லிசாவை மீண்டும் கிளை நிலையத்துக்கு அனுப்பி அதிகப்படை உதவியைப் பெறுவது. அதன்படி அவர்கள் மரம் வெட்டுபவர்களைப் போல் கூச்சலிட்டுக்கொண்டு பிர்மரங்களை வெட்டிச் சாய்த்தனர். வோப் ஏரியில் சப்தமிட்டுக் கொட்டமடித்தனர். சலசலப்புக் கேட்டு கண்காணித்த ஜெர்மானியர் மீண்டும் காடுகளில் புகுந்து கொண்டனர். லிசாவை திரும்ப அனுப்பியதும் வஸ்கோவ் குன்றுகளை அடைந்து காப்பரண்களை அமைத்துக் கொண்டான். அவன் எண்ணத்தைப் போலவே ஜெர்மானியர்கள் மலைத்தொடரைச் சுற்றி தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

லிசாவின் மனோ உலகம் நம்பிக்கைகள் சார்ந்தது; தனிமையில் உழல்வது. சின்ன வயதிலிருந்தே அவள் உழைத்தாள். உடல் நலம் குன்றிய தாயைப்பேணுவதிலும், குடிகாரத் தகப்பனை சகிப்பதிலுமே அவளுடைய காலம் கரைந்தது. நாகரீகம் உணராது அவளது வாழ்வு காடுகளிலேயே கழிந்தது. அவளது சிநேகிதிகள் மணமாகி, மேற்கொண்டு படிக்கச் சென்றதுமே அவளை வெறுமை பற்றிக் கொண்டது. மறுநாளைப் பற்றிய கனவுகள் மட்டுமே அவளை உயிர்ப்புடன் வைத்திருந்தது. தான் நம்பும் இன்பகரமான வாழ்வு நாளை வந்துவிடும் என்ற நம்பிக்கையே அவளை வாழவைத்தது. அவளுடைய தினங்கள் யாவும் தனிமை நிறைந்ததும், சோகம் ததும்பியும் உதிர்ந்த போதிலும் அவள் கண்களில் சதா நம்பிக்கையின் ஜீவ களை இருந்தது. அந்த நம்புதலை மெய்யாக்கும் வண்ணம் ஒரு வேட்டைக்காரன் வந்ததும், நேசத்துக்கும் காதலுக்கும் ஏங்கும் அவள் இதயம் பரவசித்தது; குதூகலித்தது. ஆனால் யுத்தம்? அதுவோ வக்கிரச் சிரிப்புடன் காய்களை மாற்றி அவள் கனவுகளைப் பிடுங்கியது. பெற்றோரை இழந்து ராணுவப் பயிற்சி பெற்று படையில் இணைந்தாள் லிசா. வேட்டைக்காரன் குறித்த கனவுகள் கானலாக, நாடும் நாளைய வாழ்வுமே அவள் சிந்தையில் நிறைந்தது. பழைய நினைவுகளிலும், நாளைய சுகங்களிலும் மனம் லயித்த லிசா சதுப்பு நிலத்தைக் கடக்க கொம்பை எடுத்துக்கொள்ளாமல் வெறுமனே இறங்கினாள். நடக்க நடக்க சதுப்பு நிலம் அச்சம் தருவதாக இருந்தது. மனசில் பயம் கவிய சகதியில் அமிழ்ந்து முன்னேற முயற்சித்தாள். திடீரென அருகில் சதுப்பு நிலம் வெடித்துக் கொப்புளிக்க, அதிர்ச்சியில் பழகிய தடம் விடுத்து கால்கள் தடுமாற லிசா கொஞ்சம் கொஞ்சமாய் சகதியில் மூழ்கலானாள். பலங்கொண்ட மட்டும் கூக்குரல் எழுப்பியும் பயனில்லை. சற்றைக்கெல்லாம் சதுப்பு நிலம் அமைதியடைந்தது.

படை வந்துவிடும் என்ற நம்பிக்கையில் ஒரு நாளைக் கழித்த வாஸ்கோவ் தன் படைப் பெண்களை ஒன்று கூட்டினான். குர்விச் மட்டும் வஸ்கோவின் புகையிலைப்பையை எடுத்துவர காப்பரண் ஒன்றுக்குப் போயிருந்தாள். காடும், குன்றுகளும் நிசப்தம் கொண்டிருந்தன. பறவைகளின் கீச்சிடல்களையும், மிருகங்களின் அச்ச ஓசைகளையும் கிரகித்து எதிரிகளின் நடமாட்டத்தை உணரும் வல்லமை அவனுக்கிருந்தது. அத்தகைய செவிகள் அப்போது சன்னமான ஒரு ஓசையைக் கேட்டன. குர்விச் ஆபத்தில் இருப்பதாக அவன் உள்ளம் பதறியது. ழேனியாவைத் துணைக்கழைத்துக்கொண்டு வஸ்கோவ் விரைந்தான்.

வஸ்கோவ் போனபோது எல்லாம் முடிந்திருந்தது. குர்விச்சின் மார்புகளிலிருந்து குருதி பொங்கி வழிந்திருந்தது. ழேனியா முகம் வெளுத்துப் போனாள். அவள் இதயம் வெறிகொண்டு இறுகியது. கால் தடயத்தைப் பின்பற்றி வஸ்கோவ் ழேனியாவுடன் குர்விச்சைக் கொன்றவர்களைத் தேடினான். இருவர் கண்ணில் பட்டனர். சப்தமின்றி குத்துவாளால் ஒருவனைக் குத்திக் கொன்றதும் இரண்டாமவன் மீது தாவினான் வஸ்கோவ். எதிரி நல்ல பலசாலி. அவன் கைகளில் உயர்ந்த கத்தி சிறுகத்தாழ்ந்து வஸ்கோவின் குரல்வளையை நெருடியது. ஒன்றும் செய்வதற்கில்லை. வஸ்கோவ் இறுதிப் போராட்டம் நிகழ்த்தினான். அப்போதுதான் அது நடந்தது. மலரையொத்த மனசையெல்லாம் கழட்டி எறிந்து கண்களில் ரௌத்திரம் கொப்பளிக்க ழேனியா துப்பாக்கியின் அடிக்கட்டையால் அந்த ஜெர்மானியனின் மண்டையை அடித்துப் பிளந்தாள். ஊற்றாய் ரத்தம் பீறிட்டது. அவனும் சரிந்தான். வஸ்கோவ் நன்றியுடன் ழேனியாவை நோக்க அவளோ அடுத்தடுத்து மூன்று கொலைகளைக் கண்ட நடுக்கத்தில் நின்றிருந்தாள்.

எதிரிகளின் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு மற்றவர்களை அடைந்த சற்று நேரத்தில் அவர்கள் ஜெர்மானியர்களை எதிர்கொள்ள நேர்ந்தது. தானியங்கித் துப்பாக்கியுடன் அஸ்யானினு ஒரு குன்றோரம் பதுங்க, வேறொரு குன்றினடியில் வஸ்கோவ் பதுங்க சண்டை துவங்கியது. காட்டின் அமைதி குலைந்து குண்டுகள் பாறைகளை சிதைத்தன. வஸ்கோவிடமிருந்து கிளம்பிய கைக்குண்டு ஓசையுடன் வெடித்து இரு ஜெர்மானியரைக்காவு வாங்கியது. சரமாரியாய் குண்டுகள் சீறிய கணத்தில் காலியா கிலி கொண்டிருந்தாள். ழேனியாவின் துப்பாக்கி விட்டு விட்டு வெடித்தது. சட்டென்று குண்டுகள் காலியானதும் வஸ்கோவ் செய்வதற்றுச்சமைந்தான். அப்போது ஜெர்மானியரைப்பின் தள்ளும் வகையில் அஸ்யானினுவின் தானியங்கித் துப்பாக்கி வீராவேசம் கொண்டு முழங்கியது; வெறியுடன் சூழன்றது; எதிரியைப்பின்தள்ளியது.

அமைதி மீண்டும் நிலவியதும் வஸ்கோவ் காலியாவுடன் ஜெர்மனியரைப் பின்பற்றினான். குறிப்பிட்ட ஓரிடத்தில் காலியாவை பதுங்க வைத்துவிட்டு வேறொரு திட்டத்துடன் எதிரிகளை எதிர்பார்த்திருந்தான் அவன். அணியாய் வந்த ஜெர்மானியர் தன்னைக் கடக்கும் வரை காத்திருந்தான். காலியாவோ கிலியுடன் மனசளவில் செத்துக் கிடந்தாள். அனாதையாக வாழ்வைத் துவங்கிய காலியாவுக்கு பெற்றோர் பாசம் இன்னதென்றே தெரியவில்லை. தன் மன சோகத்தை இட்டுக்கட்டும் கதைகளின் மூலம் தணித்துக் கொண்டே வளர்ந்தவள் அவள். பொய்யில் சுவராஸ்யம் கொள்ளும் கற்பனை உலகம் அவளுடையது. அதே பொய் உலகம் இப்போது அவளை, ஜெர்மானியரின் குண்டு பாய்வதற்கு முன்பே கோழையாக்கி சாகடித்திருந்தது. நேரம் நழுவியது. திடீரென கூச்சலுடன் காலியா ஓடத் துவங்கினாள். சீறி வந்த ஜெர்மன் குண்டு அவளைத்துளைக்க, பந்துபோல் துள்ளி விழுந்தாள் காலியா. வஸ்கோவ் நிலை குலைந்து போனான். ஜெர்மானியரை ஆட்டம் காட்டி கொஞ்ச நேரம் குழப்பி திசை திருப்பி காட்டிற்குள்ளேயே திரும்ப வைக்கும் நோக்கத்துடன் கூக்குரலோடு சுட்டான். பின் எழுந்து ஓடினான். ஜெர்மானியர் விரட்டினர். வெகுநேரம் அவர்களை போக்குக் காட்டியவன் கையில் துப்பாக்கி குண்டு பாய, பாழடைந்த சின்ன கட்டிடம் ஒன்று ஜெர்மானியர்களின் பாசறையாக இருப்பதை அறிந்து கொண்டான்.

விடியல் அலுப்போடு எழுந்தது. ஜெர்மானியர் பத்து பேர் வெடி மருந்தோடு கிளம்பினர். இருவர் மட்டுமே

அவர்களின் மறைவிடத்தில், ஒருவனை வீழ்த்தி ஒரு தானியங்கித் துப்பாக்கியோடு ழேனியாவையும், அஸ்யானினுவையும் அடைந்தான் வஸ்கோவ். குண்டு பாய்ந்து அவன் சற்றே பலம் இழந்திருந்தான். ஜெர்மானியர் ஆற்றை கடக்கும் சமயம் அவர்களை வீழ்த்த வேண்டுமென திட்டம் வகுத்து மூவர் அடங்கிய அக்குழு கடைசிப்போரில் இறங்கியது.


ஜெர்மானியர் நீரில் இறங்கியபோது சண்டை துவங்கியது. அஸ்யானினுவின் துப்பாக்கி சில உயிர்களைக் குடித்தும் சில உயிர்களை அஞ்ச வைத்தும் சீறிக்கொண்டிருந்தது. எல்லாம் கொஞ்சநேரம் தான்; காற்றைக் கிழித்து வந்த ஜெர்மன் குண்டு அடிவயிற்றில் பாய்ந்தவரைதான். அரைகுறை உயிரோடு போராடிக்கொண்டிருந்த அவளை வஸ்கோவ் ஓரிடத்தில் பத்திரப்படுத்தினான். வெம்மையுடன் கொப்புளித்த ரத்தம் அவன் கைகளில் பிசுபிசுத்தது. உயிரோடு எதிரியின் கையில் சிக்கும் கேவலத்தை தவிர்க்க தன்னைத்தானே சுட்டுக்கொண்டு மரித்தாள்.

ழேனியா துப்பாக்கி கைகளில் கனக்க கூச்சலுடனும், பாட்டோடும் வெறி கொண்டவளாய் ஓடத்துவங்கினாள். ஜெர்மானியரின் கவனம் முழுக்க அவள் மேல் கவிந்தது. ழேனியாவுக்கு வாழ்வென்றால்சந்தோஷம். சந்தோஷம் மட்டும்தான். ஒரு வீராங்கனையாக அவள் வாழ்வைக் கழித்த வேளையில்தான் போரின் கோர நகங்கள் அவள் குடும்பத்தைக் கீறிப்பார்த்தது. பெற்றோரைப் பலி தந்து ஒரு கர்னலின் காதல் நாயகியாகி பின் படைக்கு வந்தாள் ழேனியா. இந்தக் கணத்தில் அவள் மரணத்தின் நுழைவாயிலில் ஆனால் கவலையற்று அவள் ஓடிக்கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்தில் ஜெர்மன் துப்பாக்கிகள் அவள் உடலில் முத்தமாரி பொழிந்தன; கடைசியில் அவளும் சல்லடையானாள்.

எஞ்சியவர்கள் வஸ்கோவ்; நான்கு ஜெர்மானியர்; மழை அடர்ந்த இரவு. மற்றபடி எங்கும் பேயமைதி. மேற்கொண்டு பயணம் தொடரமுடியாது எதிரிகள் தங்கள் புகலிடம் திரும்ப வெஞ்சினம் பொங்கி உள்ளம் குமுற வஸ்கோவ் அவர்களை அவர்கள் இடத்திலேயே சந்தித்தான். அவனது திடீர்ப்பிரவேசம் அவர்களை அசரவைக்கத் துப்பாக்கி முனையில் அவன் வேலை இலகுவானது.

சிறைப்பட்ட நான்கு ஜெர்மானியரும் முன் நடக்க வஸ்கோவ் பின் நடந்தான். அவன் உடல் பலம் குன்றிக் களைத்திருந்தது. கண்கள் மயங்கின. நடப்பது சிரமசாத்தியமாயிருந்தது. காட்சிப் புலன்கள் சிறிது சிறிதாய் கலங்கிக் குழம்பின. இருந்தும் அவர்களை தன்படைவசம் ஒப்புவிக்க வேண்டுமென்ற வெறி அவனைமுன் தள்ளியது. உடல் வலுவிழந்து தள்ளாடியபோதும் அவன் நடந்தான்; நடந்து கொண்டேயிருந்தான். மயங்கிய அவன் கண்களின் எதிரே ஒரு கூட்டம் வருவது மசமசத்துத் தெரிந்தது. அது அவன் படைதானென, நிச்சயமானதும், அவன் கண்கள் இருள, மயங்கிச் சாய்ந்தான்.

சினியூஹின் குன்றுத்தொடரில் அதிகாலை மீண்டும் அமைதியாய்... நிசப்தமாய் உதித்தது. ●



# உள்ளூராட்சித் தேர்தல்: காகிதக் கணைகள் — உண்மையின் நெருப்பில்

1983 மே மாதம் 18-ம் திகதி இலங்கையில் நடைபெற்ற மாநகர, நகர சபை தேர்தல் பற்றி 'EPRLF' செந்தோழர்கள் "முழக்கம்" (ஜூன் 1983) என்ற தங்கள் சஞ்சிகையில் "யாழ் உள்ளூராட்சித் தேர்தல் — ஒரு கண்ணோட்டம்" என்ற தலைப்பில் விமர்சனம் (?) செய்திருக்கிறார்கள். தங்களை மார்க்ஸியவாதிகள் என்று பாவனை காட்டித் திரியும் இவர்களிடம் பூர்ஷுவா அரசியல் விமர்சகர்கள் சிலரிடம் காணப்படும் தெளிவோ அல்லது பகுத்தாராயும் திறனோ இல்லை.

ஸ்ரீலங்கா அரசு மே 18-ம் திகதி நடத்தத்தீர்மானித்திருந்த உள்ளூராட்சித் தேர்தலை நிராகரிக்குமாறு கோரி "அரச பயங்கரவாதத்தைத் தேர்தலினால் வெற்றி கொள்ள முடியாது" என்ற தலைப்பில் நாங்கள் துண்டுப் பிரசுரம் வெளியிட்டோம். இது தொடர்பாக மக்கள் மத்தியில் தீவிர அரசியற் பிரச்சாரம் மேற்கொண்டோம். அரச பயங்கரவாதத்தையும் சிங்களப் பேரினவாதத்தையும் நியாயப்படுத்தும் வகையில் பாஸிஸவாதியான ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் நிற்க முனைந்த ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு எதிராக நாம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இதனையடுத்து சகல ஐ.தே. கட்சி வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து வாபஸ் வாங்கினார்கள். குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸும் இத்தேர்தலில் இருந்து ஒதுங்கியது. தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெரும்பாலான வேட்பாளர்களுமே தேர்தலில் இருந்து ஒதுங்குவதாக அறிவித்தனர். ஆனால் "துப்பாக்கிகளுக்கு நாம் அஞ்சப் போவதில்லை" என்றும், நாங்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்பவர்கள் அந்த கோரிக்கையை மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கட்டும்" என்றும் கூறி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ. அமிர்தலிங்கம் தேர்தலில் நின்றே தீருவது என்று அறிவித்தார்.

## பகிஷ்கரிப்பா? இல்லையா?

யாழ் உள்ளூராட்சித் தேர்தலின் சாராம்சம் யாதெனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் கோரிக்கையை ஏற்று ஸ்ரீலங்காப் பாராளுமன்ற அமைப்பை ஸ்திரப்படுத்தும் உள்ளூராட்சித்தேர்தலை மக்கள் பகிஷ்கரிக்கப் போகிறார்களா அல்லது த.வி.கூ. தலைவர் அமிர்தலிங்கத்தின் கோரிக்கையை ஏற்றுத்தேர்தலில் மக்கள் வாக்களிக்கப்போகிறார்களா என்பதுதான்.

இதோ 'EPRLF' மார்க்ஸிச(?)ச் செந்தோழர்கள் இத்தேர்தல் பற்றிக் கூறுவதைப் பாருங்கள்:

"அதாவது ஆளும் கட்சி வேட்பாளர்களைச் சுட்டுக் கொலை செய்ததன் மூலம் அவர்களைத் தேர்தலில் இருந்து வாபஸ் வாங்க வைத்தவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியை வெறும் மிரட்டலுடன் விட்டுள்ளார்கள். இதன் மூலம் ஒரு விதம் வாக்குகள் வாங்கினாலும் அவர்களை தேர்தலில் மீண்டும் வெற்றி அடையும் வாய்ப்பைத் தோற்று வித்தார்கள். ஏனெனில் போட்டிக்கு யாருமில்லாதபோது இவர்கள் தாமாகவே வெற்றி வாய்ப்பைத் தழுவிக் கொள்வர்"

(முழக்கம் ஜூன் 1983)

போட்டிக்கு யாருமில்லாத போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தாமாகவே வெற்றி வாய்ப்பைத் தழுவிக் கொள்வார்களாம். போட்டிக்கு யாராவது நின்றிருந்தால் த.வி. கூட்டணி தோற்றுப் போயிருக்குமாம். என்ன வாதம்! என்ன தர்க்கம்!

உங்களது அரசியல் ஆருடத்தைப் பார்த்துப் பார்த்து உலகம் சிரிப்பதைக் கூட விளங்கிக் கொள்ள முடியாத அறியாமை அந்தகாரத்தில் நீங்கள் உழல்வது தான் எவ்வளவு பரிதாபகரமானது. யாழ் உள்ளூராட்சித் தேர்தலானது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான பலப்பரீட்சையைக் காட்டும் போட்டித் தேர்தலென்பது 'EPRLF' முன் வைக்கும் விஷமத்தனமான கருத்தாகும். தேர்தலில் வெற்றிபெற ஐ.தே. கட்சியானது வேட்பாளரை நிறுத்துவதில்லையென்பதும், வெற்றி பெறுவதற்காக ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் தேர்தலில் நிற்பதில்லையென்பதும் ஊரறிந்த விடயம். எப்படியும் தமது வேட்பாளர்களை வடக்கில் நிறுத்த வேண்டும் என்பதற்காக ஐ.தே.கட்சி அரசாங்கமும், தேர்தலில் நின்று தோற்றாலும் ஆளுங்கட்சியின் சார்பில் சில சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக ஐ.தே.கட்சி வேட்பாளரும் இத்தேர்தலில் பங்கு கொண்டனர். இதை விளங்குவதற்கு பொது அறிவே போதுமானது. மார்க்ஸிய ஞானமெல்லாம் இதற்கு அதிகபட்ச விவகாரம்.

பிற்போக்குப் பூர்ஷுவா நலன்களைப் பிரதிபலிக்கும் — சந்தர்ப்பவாதத்தையும் சமரசத்தையும் இணைத்துக் கேவலமான அரசியல் வியாபாரம் நடத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகத்தனத்தை மக்கள் பூரணமாக விளங்கிக் கொள்ள சிறிது காலம் எடுக்கவும் நேரலாம். ஆனால் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு இனப்படுகொலை நடத்தும் ஐ.தே. கட்சியை வடக்கில் மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுத்திருப்பார்களென்று 'EPRLF' கருதினால் முட்டாள்தனத்துக்கு வரைவிலக்கணம் தேடி வேறெங்கும் நாம் அலைய வேண்டியதில்லை. நீங்கள் உங்களை முட்டாள்கள் என்று கருதுவது சரியானது. ஆனால் வெகுஜனங்களை முட்டாள்கள் என்று கருதுவதுதான் தவறானது.

நடைமுறை விளங்காமல் "ஈழ விடுதலைக்கெதிரான சத்தியப் பிரமாணத்தை நிராகரிப்போம். ஈழ விடுதலைக்கெதிராகச் சத்தியப் பிரமாணம் எடுக்கமாட்டோம்" என்று நீங்கள் சிவப்புச் சிவப்பாய் முழங்கியதைப் பொதுமக்கள் சட்டை பண்ணாமல் விட்டதிலிருந்தாவது சில பாடங்களைக் கற்றுக் கொண்டிருக்க வேண்டாமா?

சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளாத தமிழ் அரசு ஊழியர்களுக்கான திட்டமெதனையும் முன் வைக்காது நீங்கள் சகட்டு மேனிக்கு விட்ட மொட்டை முழக்கம் மக்கள் மத்தியில் எடுபடவேயில்லை. இனிமேலாவது மக்களாகிய ஆசான்களிடம் பாடம் கேட்டுக் கொண்டு 'போஸ்டர்' ஒட்டப் பழகிக் கொள்ளுங்கள்.

நடைமுறையே விளங்காத உங்களுக்கு யாழ் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் எதனைக் காட்டுகின்றன என்பதனை விளக்க வேண்டிய தேவை எங்களுக்கு எழுகிறது.

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து தமிழீழத்தில் இருந்து வெளியாகும் Saturday Review என்ற ஆங்கில வார ஏடு கருத்துத் தெரிவிப்பதை நோக்குவோம்.

"வாக்களிக்குமாறு த.வி. கூட்டணி விடுத்த அழைப்பை வடக்கு நிராகரித்தது" என்ற தலைப்பில் இப்பத்திரிகை கூறுவதாவது:

"மே 18 ஆம் திகதி புதன் கிழமை வடக்கில் கிட்டத்தட்ட பூரணமான தேர்தல் பகிஷ்கரிப்பு நடைபெற்றதென்றே கூற வேண்டும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இது போன்ற நிகழ்ச்சி இதற்கு முன் எப்போதாவது கூட இடம் பெற்றது கிடையாது. உள்ளூராட்சித் தேர்தல்களை பகிஷ்கரிக்குமாறு தீவிரவாதிகள் விடுத்த அழைப்புக்குச் செவி சாய்த்துப் புதன்கிழமையன்று நடைபெற்ற தேர்தலில்பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் பருத்தித் துறையில் 99% ஆனோரும் வல்வெட்டித்துறையில் 98% ஆனோரும், யாழ்ப்பாணத்தில் 86% ஆனோரும், சாவகச்சேரியில் 85% ஆனோரும் வாக்களிக்கவில்லை."

"ஒட்டுமொத்தமாக நோக்கின் வடக்கில் வாக்காளர்களில் 8% ஆனோரே வாக்களித்துள்ளனர். 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் தேசியச்சராசரி விகிதத்திலும் அதிகமாக 80% ஆனோர் வாக்களித்தமையோடும் 1979ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 75% ஆனோர் வாக்களித்தமையோடும் ஒப்பிட்டால் இது ஆழமான வேறுபாட்டைக் காட்டுகிறது."

Far Eastern Economic Review என்ற ஆங்கில சஞ்சிகையில் பிரசித்தி பெற்ற தெற்கு, மேற்காசியப் பிராந்திய விசேஷ நிருபரான சலாமட் அலி பின்வருமாறு எழுதுகிறார்.

"பிரிவினை கோரும் தலைமறைவான தமிழ்த் தீவிரவாத இயக்கமானது சில மாதங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்போது மிகப்பெருமளவில் பொது மக்களின் அனுதாபத்தைத் தன்பக்கம் ஈர்த்துள்ளது."

கொழும்பிலிருந்து வெளியாகும் Lanka Guardian (1-6-83) பின்வருமாறு எழுதுகிறது.:

"இத்தேர்தலின் வாக்களிப்பு விதமானது சரித்திரத்திலேயே மிகவும் குறைவானதாகும். அதிர்ச்சியூட்டும் வகையில் இரண்டு இடங்களில் 1%, 4% என்ற அளவிலும் இடம் பெற்றுள்ளது. ஆயுதந்தாங்கிய தீவிரவாதிகளுக்கு ஆகக் கூடிய புள்ளிகள்(TOP MARKS) கொடுக்கத்தான் வேண்டும்.

"சுதந்திரன்" (22-5-83) பத்திரிகை "தேர்தல் பகிஷ்கரிப்பு 90 சதவீதம் வெற்றி!" என்ற தலைப்பிட்டு பின்வருமாறு எழுதுகிறது:

ஸ்ரீலங்கா அரசு நடத்தும் தேர்தலில் பங்கு கொண்டு வாக்களிக்க வேண்டுமென்று த.வி. கூட்டணித் தலைமை விடுத்த வேண்டுகோளை 90 சதவீதமான தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதும் குறிப்பிடத்தக்கது."

இவ்வளவிற்குப் பிறகும் "தமது வன்முறை மூலம் இவர்கள் மறைமுகமாக கூட்டணிக்கு உதவி செய்கிறார்கள்" என்று 'EPRLF' எழுதுவதை 'நரித்தனம்' அல்லது 'வஞ்சகத்தனம்' என்றுதான் புரிந்து கொள்ள முடியும்.

## அரசியல் தலைமை

"ஆனால் த.வி. கூட்டணி எப்படித்தான் பிற்போக்குவாதக்கும்பலாய் இருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஒரே ஒரு அரசியற்கட்சி. அது மாத்திரமல்லாமல் 20 வருடங்களுக்கு மேலாக தமிழ்ப்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசியல் கட்சி. அவர்கள் எல்லோரும் பிற்போக்குவாதிகள். அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து தூக்கியெறியப்பட வேண்டியவர்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்களைத் தூக்கி எறிந்தால் மக்களுக்குத் தலைமை தாங்க இப்பொழுது எந்த முற்போக்குக் கட்சிகள் அல்லது அமைப்புகள் தயாராக உள்ளது?"

(முழக்கம் ஜூலை 1983)

இப்படிக் கேட்பது யார்? செந்தோழர்கள்.

இது கேள்விதான்.

ஆனால் இது எங்களுக்குப் பல பதில்களைச் சொல்லுகின்றது. இந்த கேள்வி செந்தோழர்களின் நிலைப்பாடு பற்றிய மூன்று அனுமானங்களுக்கு எங்களை இட்டுச் செல்கிறது.

1. இப்போது மக்களுக்குத் தலைமை தாங்க எந்த முற்போக்கு அமைப்பும் தயாராக இல்லை.

2. எனவே த.வி. கூட்டணியை இப்போது தூக்கியெறியக் கூடாது.

3. ஆகவே த.வி. கூட்டணி தேர்தலில் வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

த.வி கூட்டணிக்கு நாங்கள் மறைமுகமாக உதவி செய்வதாகச் செந்தோழர்கள் முன் வைக்கும் தர்க்கத்தை விட எங்களின் இந்த தர்க்கரீதியான அனுமானங்கள் அறிவு பூர்வமானதாகவும், நியாயபூர்வமானதாகவும் இருக்கிறது.

தமிழீழ மக்களின் விடுதலைக்குத் தலைமை தாங்க 'EPRLF' செந்தோழர்கள் தங்களுக்கு லயாக்கில்லை என்றுகருதுவது நியாயமானது தான். அதற்காக ஆயுதப் போராட்டம்மூலமே தமிழீழ விடுதலையைப் பெற முடியும் என்ற அசைக்க முடியாத இலட்சியத்தில் மக்களின் முன்னணி இயக்கமாகத் திகழ்ந்து வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை இவர்கள் நிராகரிக்க முயல்வது சிறு பிள்ளைத்தனமானது. அந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க அரசியல் தெளிவும் இராணுவத் திட்டமும், என்றும் அணையாத விடுதலைப் பேருணர்வும், நிலைகுலையாத தன்னம்பிக்கையும், பரந்த மக்கள் ஆதரவும் எமக்குண்டு. அதற்கு மாறாக, த.வி. கூட்டணி மக்கள் மத்தியிலிருக்கும் ஒரேயொரு அரசியற் கட்சி, அது மாத்திரமல்லாமல் 20 வருடங்களுக்கு—மேலாக தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திவரும் ஒரே ஒரு கட்சியென்று தலையில் முக்காடு போட்டுக் கொண்டு செந்தோழர்கள் ஒப்பாரி வைப்பதில் எந்த அர்த்தமுமில்லை. த.வி. கூட்டணியினர் தமது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்குச் செந்தோழர்களையே கூட்டிச் செல்லலாம். த.வி. கூட்டணியினரே! உங்களுக்காக இந்தச் சிவப்புத் தம்பிகள் எவ்வளவு சாமர்த்தியமாக வாதாடுகிறார்கள் தெரியுமா? சும்மா சொல்லக்கூடாது.

## எச்சரிக்கையும் அச்சுறுத்தலும்

"இவற்றுக்கு மேலாக இவர்கள் மக்களுக்கும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். அதாவது யாரும் தேர்தலில் நிற்கக்கூடாதென்றும் வாக்களிக்கச் செல்லக்கூடாதென்றும் எச்சரித்துள்ளார்.

(முழக்கம் ஜூன் 1983)

நாங்கள் மக்களுக்கு எச்சரிக்கை செய்திருப்பதாக 'EPRLF' சொல்கிறது. "தமிழ் மக்கள் இனியும்இப்படியான தியசக்திகளின் தேர்தல் காலத் திமிர் தமிழீழ வலையில் சிக்காது தேர்தலை நிராகரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று "அரச பயங்கரவாதத்தை தேர்தலினால் வெற்றி கொள்ள முடியாது" என்ற தலைப்பிலான பிரசுரத்தில் நாங்கள் விடுத்துள்ள வேண்டுகோளை எச்சரிக்கை என்று 'EPRLF' செந்தோழர்கள் கருதுவார்களானால் "ஈழ தேச மக்களே ஸ்ரீ லங்கா ஜனாதிபதி தேர்தலை நிராகரிப்பீர்கள்" என்று மக்களிடம் 'EPRLF' விடுத்திருக்கும் வேண்டுகோளுக்கு செந்தோழர்களின் சிவப்பு அகராதியில் என்ன பெயர் என்று தெரியவில்லை.

மக்களுக்கும் மக்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கும் வேறுபாடு காணத் தெரியாமல் இந்த அரசியற் பாமரர்கள் திணறுகிறார்கள்.

நாங்கள்—

மக்களுக்கு விடுத்திருப்பது

வேண்டுகோள்

துரோகிகளுக்கு

விடுத்திருப்பது எச்சரிக்கை!

துரோகிகளுக்கு எங்களின் பிரசுரத்தில் நாங்கள் விடுத்திருக்கும் எச்சரிக்கையைக் கீழே தருகிறோம்.

"இப்பிரசுரத்தின் மூலம் நாம் இனவாத அரசிற்கு சார்பாக, எம் இனத்தின் எட்டப்பர்க்குக் கூற விரும்புவது இதுதான். இனிமேலும் தமிழீழத்தில் எவரும் சிங்கள இனவாத அரசிற்கு சார்பாக இயங்காதீர்"

உங்களிடம் உருக்கமாக வேண்டுவது இதுதான். "உங்கள் அழிவுகளினால் உங்களது மனைவிகளை எங்களது சகோதரிகளை நிர்க்கதிக்குள்ளாக்காதீர். எமது எதிர் கால சந்ததியினராகிய தமிழீழ மழலைகளை அனாதைகளாக்காதீர்."

இவ்வேண்டுகோளையும் மீறி எம் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் சிங்கள இனவாத அரசின் கைக்கூலிகளாக நீங்கள் செயற்படுவீர்களேயானால்! நாம் எடுக்கும் தொடர்ந்த நடவடிக்கைகள் இன்னும் கடுமையானதாகவே இருக்கும். நாம் எடுக்கும் இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படைகளின் உதவியை நாட எண்ணாதீர்.

துரோகிகளுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கையிலும் கூட எங்களின் உருக்கமான வேண்டுகோளும் பிணைந்தே நிற்கிறது.

இவ்வளவிற்குப் பிறகும் மக்களை நாம் எச்சரிக்கை செய்திருப்பதாக 'EPRLF' எழுதுவது "அபாண்டமானது" என்று மட்டும்தான் எங்களால் கூறிக் கொள்ள முடியும்.

ஒரு விடுதலை இயக்கமானது தமது கொள்கை விளக்கங்கள், சித்தாந்தங்களின் மூலம் மக்களைத் தமது பக்கம் வென்றெடுக்க வேண்டுமேயொழிய மிரட்டலின் மூலமோ அச்சுறுத்தலின் மூலமோ வென்றெடுக்க முடியாது என்பதை நன்கு உணர வேண்டும்" என்று 'EPRLF' செந்தோழர்கள் எங்களுக்கு சிவப்பு உபதேசம் செய்திருக்கிறார்கள். அதை நீங்கள்தான் நன்குணர வேண்டும்.

மிரட்டலின் மூலமோ, அச்சுறுத்தலின் மூலமோ மக்களை வென்றெடுக்க முடியாது. எங்களது மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் பயந்துதான் யாழ் மாவட்டத்தில் 92 விதமான மக்கள் தேர்தலை நிராகரித்துள்ளனர் என்று கூறுவது நடைமுறைச்சாத்தியமற்றது என்பதைச் செந்தோழர்கள் முதலில் நன்குணர வேண்டும்.

மக்கள் தேர்தலில் வாக்களிக்கத்தான்வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்களானால் அதனைத் துப்பாக்கிகளைக் காட்டி அச்சுறுத்தி மாற்றிவிட முடியாது. இதற்கு மத்திய அமெரிக்க எல்சல்வடோரிலிருந்து செந்தோழர்களுக்கு ஒரு சிவப்பு உதாரணம் தருகிறோம்.

1981ல் எல்சல்வடோரில் தேர்தல் நடைபெற்றபோது இடதுசாரி கொரில்லாக்கள் தேர்தலை பகிஷ்கரிக்குமாறும் மக்களைத் தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென்றும் வேண்டுகோள் விடுத்தனர். தேர்தலில் வாக்களிக்கும் எவரும் தீவிரவாத கொரில்லா இயக்கத்திற்கு எதிராகவே வாக்களித்ததாகக் கருதப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தனர். இத்தேர்தலில் ஆகக் கூடிப் போனால் நாலு லட்சம் பேர் வாக்களிக்கக்கூடும் என்று அரசியல் அவதானிகள் ஆரூடம் தெரிவித்தார்கள். ஆனால் தேர்தலின்போது 15 லட்சம் பேர் வாக்களித்தனர். இடதுசாரி கொரில்லாக்களின் பகிஷ்கரிப்புக் கோரிக்கையையும் மீறி 60 விதமானோர் தீவிர வலதுசாரி அரசாங்கத்திற்குத் தங்கள் வாக்குகளை அளித்தனர். மக்கள் கருத்தைத் துப்பாக்கிகளால் ஒரே நாளில் மாற்றி விட முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் வேண்டுகோளில் நியாயமுண்டு என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி சந்தர்ப்பவாத அரசியல் நடத்துகிறது என்பதையும் தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடியவர்கள் என்பதையும் உணர்ந்துதான் தமிழீழ மக்கள் எமது கோரிக்கைக்கு ஆதரவு நல்கித் தேர்தலைப் பகிஷ்கரித்தனர்.

## யாழ் தான் மையமா?

"தீவிரவாதிகளின் செயற்பாடுகள் யாவும் யாழ் மாவட்டத்தை மையமாகக் கொண்டதாகவே உள்ளது. ஆனால் ஈழப்பிரதேசமென்பது மட்டக்களப்பு, மன்னார், திரிகோணமலை, பொத்துவில், மலையக மக்களையும் உள்ளடக்கியதென்பதை இவர்கள் மறந்து விட்டார்கள் போலிருக்கிறது...... இத்தீவிரவாதிகள் தமது பிரச்சாரத்தை யாழ் குடாநாட்டில் தான் மேற்கொண்டார்களே ஒழிய அதற்கு அப்பால் அவர்களின் செயற்பாடுகள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை" என்று 'EPRLF' செந்தோழர்கள் மூக்கால் அழுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், செந்தோழர்கள் தங்களுக்கும் இந்தக் கேள்வியை எழுப்பிப் பார்த்துக் கொண்டால் நல்லது.

ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசின் அடக்கு முறைகளைத் தகர்க்க தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், வாலிபரை இணைத்து 'EPRLF' செந்தோழர்கள் மூன்று நாட்கள்தொடர்ந்து நடத்தத் தீர்மானித்திருந்த 'நீண்ட புரட்சிகர எழுச்சி யாத்திரை' அல்லது 'நீண்ட புரட்சிகரப் பயணம்' அல்லது 'புரட்சிகர யாத்திரை' (தயவு செய்து வாசகர்கள் அதனை மா-ஓ-சேதுங் நடத்திய நீண்ட பயணத்துடன் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம், என்று பணிவுடன் வேண்டுகிறோம்) யாழ் குடா நாட்டிற்குள் யாழ் பிரதான வீதியின் பெரிய கோயிலின் முன் ஆரம்பித்ததை 'ஒரு சுய சிவப்பு முரண்பாடு' என்று சொல்லலாமா? உங்கள் புரட்சிகரப் பயணத்தை ஆரம்பிக்க ஒரு யாழ்ப்பாணத்து சென். ஜேம்ஸ் ஆலயமோ அல்லது பெரிய கோயில்தானா கிடைத்தது? மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலையில் ஏதாவது ஒரு சென். ஜேம்ஸ் ஆலயமோ , ஒரு சிவன் கோயிலோ, ஒரு முஸ்லிம் பள்ளிவாசலோ இல்லாமல் போய் விட்டதா? உங்களின் புரட்சிகர மாபெரும் மே தினப் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு யாழ் ஸ்ரீதர் சினிமா தியேட்டருக்கு முன்னுள்ள வெளிதானா கிடைத்தது? மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, பொத்துவில் போன்ற இடங்களிலும் கூட்டம் நடத்த வசதியான வெளிகளைக் கொண்ட சினிமாத் தியேட்டர்களை வேண்டுமானால் நாங்களும் சிபார்சு செய்து தரலாம்.

"...சகல தமிழ்ப் பகுதிகளும் ஆயுதப்படையினால் எரியூட்டப்படுகின்றன. இவ்வளவு நடந்தும் கூட மக்கள் இவற்றுக்கெதிராக கிளர்ந்தெழுந்தார்களா என்றால் இல்லை என்பதே உண்மையாகும்."

(முழக்கம், ஜூன் 83)

தமிழ்ப்பகுதிகளில் மக்கள் கிளர்ந்தெழாமல் விடுதலையுணர்வின்றிக் காணப்படுவது தான் உண்மை என்று தெரிவிக்கும் 'EPRLF' செந்தோழர்கள் அதே இதழில் 25ம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்கள்.

## முரண்பாடுகளின் முடிச்சு

"நாலாயிரம் மக்களையோ அல்லது நாலு லட்சம் மக்களையோ, கிராமங்களையோ, நகரங்களையோ நீங்கள் அழிக்கலாம்; துவம்சம் செய்யலாம். ஆனால் மக்கள்மனதில் கொழுந்து விட்டெரியும் விடுதலைக் கனலையோ உங்களால் எரித்து விட முடியாது."

(முழக்கம், ஜூன் 83)

எது உண்மை?

முன்னையதா? பின்னையதா?

வசதிக்கேற்ப வார்த்தைகளை வளவளவென்று கொட்டுகிறார்கள்.

அது சரி, யாழ் உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய உங்கள் 'போஸ்ட்மார்ட்டம்'இருக்கட்டும். இந்தத் தேர்தலில் செந்தோழர்களின் நிலைப்பாடு என்னவாம்?

ஜனாதிபதித் தேர்தலை நிராகரித்த மாதிரி இதனையும் நிராகரித்தார்களா? அல்லது மக்கள் அபிப்பிராயக் கணக்கெடுப்பு நடந்தபோது-விளக்குக்கா? பானைக்கா? என்று வாக்கெடுப்பு நடத்திய போது பானைக்கு வாக்களிக்குமாறு தேர்தல் பிரச்சாரம் செய்தமாதிரி எதுவும் உள்வேலைகள் நடைபெற்றதா? நீங்கள் தேர்தலில் நிற்க யோசித்திருப்பதாகவும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். மக்கள் உங்களிடம் ரகசியமாய் வந்து தேர்தலில் நிற்கக் கேட்டால் பாவம் நீங்கள் தான் என்ன செய்வது? த.வி. கூட்டணி எப்படித்தான் பிற்போக்குவாதக் கும்பலாயிருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி என்றும் சொல்லி, "அவர்களைத் தூக்கி எறிந்தால் மக்களுக்கு தலைமை தாங்குவது யார் என்றும் கேட்கிறீர்கள். நீங்கள் மக்களுக்குத் தலைமை தாங்கும் நிலைமையில் இல்லை என்றும் சொல்கிறீர்கள். ஐ.தே. கட்சியில் யாரைச் சுட்டுக் கொன்றாலும் சாதாரண தமிழ் மக்கள் அதைப்பற்றிக் கவலைப்பட போவதில்லை என்றும் சொல்கிறீர்கள்.

1983 மே 18ம் திகதி மக்கள் தேர்தலில் என்ன செய்திருக்க வேண்டும் என்று உங்கள் சிவப்பு வாயிலிருந்து ஒரு சிவப்பு வார்த்தை உதிரக்கூடாதா?

"ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது துப்பாக்கிக் குழாய்களூடாகவே ஸ்ரீலங்காவின் படுகொலைவாதிகளுடன் பேச விரும்புகிறது" என்று அர்ச்சுன மகாராஜன் மாதிரி நீங்கள் சொல்வதை கேட்கையில் மேல் புல்லரிக்கிறது. இருந்தாலும் மே 18ம் திகதி மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று நடந்தது, நடப்பது, நடக்கப் போவது எல்லாம் அறிந்திருந்தும் தாங்கள் ஒரு வார்த்தை சொன்னால் எங்களுக்கு சிவப்பு ஒளி காட்டினமாதிரி இருக்குமே!

ஆனால் உங்களின் நயவஞ்சக விமர்சனங்கள், வெற்றுப் பேச்சுக்கள், தலைகீழான முரண்பாடுகள் அனைத்தும் உங்களைக் கவனமாக ஆராயும் ஒருவருக்கு 'பளிச்'சென்று தெரிந்து விடும்.

பக்கத்திற்குப் பக்கம், வரிக்கு வரி தங்கள் பத்திரிகையில் என்ன சொல்கிறோம் என்று தெளிவேயில்லாமல் உளறித் திரிகின்ற இந்த 'EPRLF' கூட்டம் மக்களை அரசியல்மயப்படுத்தும் வேலையில் இறங்கியிருக்கிறோம் என்று சொல்லுவதைக் கேட்கும்போது தமிழ் மக்களுக்குத் தான் அடுத்தடுத்து எவ்வளவு சோதனை என்ற பச்சாத்தாபமே மிஞ்சுகிறது!

எங்களின் உள்ளூராட்சித் தேர்தல் பகிஷ்கரிப்புப் பற்றி PLOT 'சகோதரர்களும்' தங்கள் பங்கிற்கு "புதிய பாதை" (கார்த்திகை 15, 1983) இதழில் விமர்சனம்(?) செய்திருக்கிறார்கள். 'EPRLF' செந்தோழர்களுக்கு நாம் மேலே கொடுத்திருக்கும் விளக்கங்கள் PLOT சகோதரர்களுக்கும் பொருந்தக்கூடியதே.

"வீதியில் துப்பாக்கி இளைஞர்களின் பயமுறுத்தல் இருந்ததனால் மக்களில் கணிசமானோர் வாக்களிக்கவில்லை" என்று PLOT எழுதுகிறது. PLOT ன் செயற்பாட்டு அநுபவங்களிலிருந்தே அவர்களுக்குச் சில விளக்கங்கள் கொடுக்கலாம்.

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலைக் குலைப்பதற்காக 1981 மே மாதம் 25-ம் திகதி ஐ.தே. கட்சியின் சார்பில் இத்தேர்தலில் போட்டியிடமுன்வந்த ஆ. தியாகராஜாவை PLOT சுட்டுக் கொலை செய்தனர். மே மாதம் 31-ம் திகதி நாச்சிமார் கோவிலடியில் கூட்டணி மேடையில் இரண்டு பொலிஸ் காவலரைச் சுட்டுக் கொல்வதன் மூலம் தேர்தலை நிறுத்தி விடலாம் என்று இவர்கள் தப்புக்கணக்குப் போட்டனர்.

நடந்தது என்ன?

நாச்சிமார் கோவிலடிச் சம்பவத்திற்குப் பின் அரசபடைகளும் சிங்களக் குண்டர்களும் யாழ் நகரைத் தீயிட்டு வெறியாட்டம் நடத்தினார்கள். மறுநாள் நடைபெற்ற தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் இராணுவ மிருகங்களே காவல் புரிந்தன. அரச படைகளின் அராஜகம் வீதிகளில் தலைவிரித்தாடியது. இதற்காகப் பயந்து மக்கள் வீட்டில் முடங்கி விடவில்லை. கூட்டணிக்கு மக்கள் இத்தேர்தலில் அமோக ஆதரவளித்து வெற்றியீட்டச் செய்தனர். நீங்கள் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்தது!

மக்கள் துப்பாக்கி இளைஞர்களுக்குப் பயந்து வாக்களிக்கவில்லை என்று நீங்கள் சொல்வதைப்பார்த்தால் வாக்களிக்கச் சென்ற 10% மானோர் தான் உண்மையான வீரர்கள் போலும்! மற்ற 90%மானோரும் பயந்த கோழைகள் என்றாகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்யாமல் தேர்தல் பகிஷ்கரிப்பு கோஷம் வைக்கப்பட்டது என்றும் PLOT கூறுகிறது. தேர்தல் பகிஷ்கரிப்பும் வெகுசனங்களை அரசியல்மயப்படுத்தும் ஒரு அரசியல் வேலை தான். மக்களைப் போராட்டங்களினூடாக, படிப்பினைகளுக்கூடாக உண்மையை உணரச் செய்து, தேர்தல் மாயையிலிருந்து பூரணமாக விடுபட உழைப்பது சரியான அரசியற்பணியாகும்.

"இன்னுமொரு தேர்தல் சுமுகமான சூழ்நிலையில் நடாத்தப்பட்டால் மக்கள் வாக்களிக்கவே மாட்டார்கள் என்று நிச்சயமாக கூறமுடியுமா? என்று PLOT கேட்கிறது."

பாமரத்தனமான கேள்வி. 'சுமுகமான சூழ்நிலை' என்றால் என்னவாம்?

அரசின் அடக்குமுறை நின்று விட்டால் என்பதா? அல்லது தமிழீழம் கிடைத்த பின் என்பதா? அத்தகைய ஒரு சுமுகமான சூழ்நிலையில் மக்கள் தேர்தலை ஏன் பகிஷ்கரிக்கச் சொல்ல வேண்டும் என்பதைக் கூடத்தான் மறுபரிசிலனை செய்ய வேண்டும்; வாக்களிப்பதை மட்டுமல்ல.

"நம்மை நாமே நிர்வகிக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையே பகிஷ்கரிக்கும் அளவுக்கு எமது போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டதா?" என்று PLOT என்னமாய்த்தான் கேள்வி எழுப்புகிறார்கள்!

சிங்கள அரசு நினைத்தால் எந்த நேரத்திலும் கலைத்து விட்டு அரசின் விசேஷ ஆணையாளரின் மூலம் நேரடியாக நடத்தக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களை 'நம்மை நாமே நிர்வகிக்கும்' உள்ளூராட்சி மன்றங்கள் என்று எழுதுகிற இவர்களை அரசியல் ஞானசூன்யங்கள் என்று மட்டும்தான் சொல்ல முடியும். நம்மை நாமே நிர்வகிக்கும் தேர்தல்களை நாமே நடத்துவோமே தவிர சிங்கள அரசாங்கமல்ல.

போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தபின் சிங்கள அரசின் தேர்தலே நடைபெறாது; நடைபெற முடியாது. தேர்தலைப் பகிஷ்கரிப்பது தான் போராட்டத்தின் உச்சக் கட்டம் என்று தலைகீழாக இவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தேர்தல் பகிஷ்கரிப்பு போன்றவைகளால் தான் போராட்டம் உச்சக் கட்டத்திற்கு வரும் .

(தமிழ் மக்கள்) "விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள்" என்றும், "புள்ளடி போடுவதுடன் தமது கடமை முடிந்து விட்டது என்று ஒதுங்கி விடுகிறார்கள்" என்றும் PLOT கூறுகிறது. இது யாந்திரிகமான-நிலையியல் பார்வையாகும். தமிழ் மக்களின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சிப் போக்குகளையும் அவர்களின் அரசியல் விழிப்புணர்வையும் ஒரேயடியாக மறுக்கும் குருட்டுத்தனமே இதுவாகும். "ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் விடுதலையாளர்களாகவும் சமூகத்தை மாற்றியமைப்போராகவும் உள்ள தங்களது பங்கினை விமர்சன பூர்வமான பிரக்ஞையுடன் உணர்ந்து விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு வருகின்றனர்" என்று திரு சச்சி பொன்னம்பலம் தமது "இலங்கை-தேசியப் பிரச்சினையும் தமிழ் விடுதலைப் போராட்டமும்" (பக். 214) என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதை இங்கு எடுத்துக்காட்டுவது பொருந்தும். ✱








ஸ்ரீலங்கா விலைபேசுகிறது: சொந்தக் கலாசாரத்தை மட்டுமல்ல, த

# ~~சொர்க்க பூமி~~




''தமிழ்த் தீவிரவாதிகளைப் பிடித்துச் சிறைக்கு கொண்டுவர முயலாதீர்கள்; அவர்களை சுடத்தான் வேண்டும்''.
(Tribune 18.7.79)

''யாழ்ப்பாண மக்களுடைய அபிப்பிராயத்தைப் பற்றி இப்போது எனக்கு எந்தக் கவலையுமில்லை. அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ அல்லது அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ நாங்கள் இப்போது யோசித்துக் கொண்டிருக்க முடியாது''.
(Daily Telegraph 11.7.83)

''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்''
(National Assembly 18.8.77)

''முகத்தில் குத்துவதைப் போல் பாவனை செய்து வயிற்றில் குத்துங்கள்''
(New Internationalist)

போலீஸையும் ராணுவத்தையும் பயங்கரவாதிகள் கொன்ற அளவிற்கு, அவர்கள் கொல்லப்படவில்லை. பழிக்குப் பழி வாங்க வேண்டும்.
(3-6-83 [illegible])




ஸ்ரீலங்காவின் கூலிப்படை












து:சோந்தக் கலாசாரத்தை மட்டுமல்ல, தமிழர்களின் உயிரையும்.






# துன்பக் கேணி



ஏழைகளங்கு சொரியுங் கண்ணீர் வெறும்
மண்ணிற் கலந்திடுமோ—தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே யங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார்.


காட்டை நினைப்பாரோ—எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே
வீட்டை நினைப்பாரோ—அவர் அன்னை
விம்மி விம்மி விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே—துன்பக்
கேணியிலே யெங்கள் பெண்களழுத சொல்
மீட்டுரையாயோ—அவர் விம்மியழவுந்
திறங்கெட்டுப் போயினர்

நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமுமில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ?

—மகாகவி பாரதி

தமிழ்ப்பெண் போராளி,




பேயரசு செய்தால்
பிணந்தின்னும்
சாத்திரங்கள்
சுன்னாகம்.
28 மார்ச்
எப்படிப் பாடுவோம்
அந்நியரின் கால்கள்
எங்கள் நெஞ்சில்
பதியும் போது...
தனயனைத் தேடும்
தாயின் கரிய ஓலம்
கேட்கும் நாங்கள்
எப்படிப் பாடுவோம்?
மரித்தோர் சடலங்கள்
மத்தியில்
எப்படிப் பாடுவோம்?
காவலுக்கு வந்தவர்கள்
குதிரறுத்த கதை இது

# சிவப்புத் தோழர்களும்

"**இ**வர்கள் **(EPRLF)** ஏற்கெனவே பரந்தன் தொழிலாளர் போராட்டம், யாழ் கூட்டுறவுச் சங்கப் போராட்டம், தாழ்த்தப்பட்ட மக்களின் பல போராட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுத்து அதில் வெற்றி அடைந்தது மாத்திரமல்லாமல் ஜே. ஆரின் பதவி நீடிப்புக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டு சிறை சென்றும் வந்துள்ளார்கள்" என்று செந்தோழர்கள் தமது "ஈழ முழக்கம்" (செப்-அக். 1983) சஞ்சிகையில் குறிப்பிடுகிறார்கள்.

பரந்தன் தொழிலாளர் போராட்டத்தை **EPRLF** முன்னெடுத்து அதில் வெற்றியடைந்தது என்பதை விடப் பெரிய பொய் எதுவுமில்லை.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் 379 தொழிலாளர்களை வேலை நீக்கியதைத் தொடர்ந்து 1981, நவம்பர் 27-ந்தேதியிலிருந்து ஒன்பதரை மாதங்களாகத் தொழிலாளர்கள் தொடர்ந்து நடத்திய வேலைநிறுத்தத்தினை பாலா தம்பு தலைமையிலான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமே முன்னெடுத்தது.

1982, செப்டம்பர் 5-ம் திகதி பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர்கள் சங்கமும் தொழில் ஆணையாளரும் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1982, செப்டம்பர் 10-ம் திகதி வேலைநிறுத்தம் முடிவடைந்தது.

இது தொடர்பாக ஊழியர்கள் சங்கம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தங்கள் போராட்டத்திற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கியமைக்காக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கு (C.M.U.) நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தம் தீர்வு காணப்பட்டு முடிவுற்றமையினைக் கொண்டாடுமுகமாகக் கிளிநொச்சியில் 1982, செப்டம்பர் 9-ம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் பாலா தம்புவே பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

இத்தொழிலாளர் போராட்டத்தைத்தாம் ஆதரிப்பதாக இந்தச் செஞ்தோழர்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குப் பின் பக்கத்துச் செஞ்சுவரில் கூடியபட்சம் போஸ்டர்களை ஒட்டியிருக்கக்கூடும் அல்லது துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்திருக்கலாம். யாரோ போராட்டம் நடத்த, எங்கோ போஸ்டர் ஒட்டிக்கொண்டு தாமே போராட்டத்தை முன்னெடுத்ததாகச்சொல்வதைப் பரந்தன் தொழிலாளர்கள் கேள்விப்பட்டால் நிலைமை விபரீதமாகிவிடும் என்பதை மட்டும் செந்தோழர்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

பரந்தன் தொழிலாளர் கோரிக்கைகளில் பின்வரும் 2 கோரிக்கைகளுக்குத்தான் அரசு இணக்கத்திற்கு வந்தது.

1. வேலை நீக்கப்பட்ட 10 தொழிற்சங்கத் தலைவர்களையும் வேறு 5 தொழிலாளர்களையும் மீண்டும் வேலையில் சேர்த்தல்.

2. நிர்வாகம் கையேற்ற தொழிலாளர் சங்க அலுவலகத்தை மீண்டும் தொழிற்சங்கத்திடம் கையளித்தல்.

இதனைவிடத் தற்காலிகத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வும் வைக்கப்படவில்லை. அவர்களின் பிரச்சினைக்குப் படிப்படியாகத்தான் தீர்வு காணப்படும் என்று கூறப்பட்டது.

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம் இப்போராட்டம் வெற்றிகரமாக முடிந்ததாகப் பிரகடனம் செய்தாலும் இப்போராட்டத்தின் போக்கினையும் முடிவையும் நுணுகி ஆராய்பவர்கள் இது வெற்றிகரமாக முடிவுபெற்றது என்று கூறமாட்டார்கள்.

செந்தோழர்களுக்குத் தொழிற்சங்கப் போராட்ட விவகாரங்களிலும் ஞானமில்லை போலும்!

யாழ் கூட்டுறவுச் சங்கப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கு என்ன? செந்தோழர்களின் பங்கு என்ன? என்பதைத் தமிழீழ மக்கள் அறிவார்கள்.

அடுத்து, ஜே. ஆரின் பதவி நீடிப்புக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டுச் செந்தோழர்கள் சிறை சென்றும் வந்துள்ளார்கள் என்று "ஈழ முழக்கம்" சொல்கிறது.

உங்களின் மகத்தான போராட்ட அநுபவமே இவ்வளவு தானா? பிரச்சாரம் செய்து அரசால் கைது செய்யப்பட்டு, பின் சிறை மீண்ட செம்மலாய் "யாழ்தேவி" புகையிரதத்தில் யாழ் வரும் தியாகிகள் லிஸ்ட் மிகவும் நீண்டது. இதெல்லாம் மிகப்பழைய சமாச்சாரம்! சரி, இனிச் செந்தோழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் எங்காவது சிலைகள் வைக்க வேண்டுமா? ●

# பச்சைப் பொய்களும்



ஒரு செம்முடிவு செய்யப்பட்டது.

# பேப்பர் புரட்சி

ரஷ்யாவில்——

1905-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை !

சரித்திரத்தில் அதற்குப் பெயர் ரத்த ஞாயிறு.

**BLOODY SUNDAY**

அந்த ஞாயிறில் ரத்தம் ஏன் சிந்தியது?

இதற்கு ஒரு கிழமைக்கு முன்புதான் சென்.பீட்டர்ஸ் பர்க்கில் இருந்த மிகப்பெரிய தொழிற்சாலை ஒன்றில் நான்கு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதற்காகப் பெரும் வேலைநிறுத்தம் ஆரம்பமாயிற்று. விரைவில் இது பெரும் பொது வேலைநிறுத்தமாக வளர்ந்தது.

இந்நிலையில் மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க கேபன் பாதிரியார் சகல- தொழிலாளர்களும் மாதா கோவில் கொடிகளையும், ஜார் அரசனுடைய படங்களையும் சுமந்துக் கொண்டு அமைதியான ஊர்வலமாக ஜார் மன்னனுடைய அரண்மனைக்குச் சென்று தங்களுடைய குறைகளைத் தெரிவித்து அவரிடம் ஒரு மனுவைச் சமர்ப்பிக்குமாறு அறிவுரை கூறினார். ஜார் மன்னன் மக்களின் முன் தோன்றி, மக்கள் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்டு அவர்களின் கோரிக்கைகளைத் திருப்தி செய்வான் என்றும் கேபன் பாதிரியார் நம்பிக்கையூட்டினார்.

ஜார் மன்னனிடம் சமர்ப்பிக்க மனுவும் தயாராகியது.

ஜார் அரசனுக்கு மனுக்கள் போடுவதனால் சுதந்திரத்தை அடைய முடியாது; ஆயுதபலங்கொண்டு போராடியே அதை அடைய முடியும் என்று இந்தக் கூட்டங்களில் தொழிலாளருக்கு போல்ஷ்விக்குகள் விளக்கிக்கூறினர். "துப்பாக்கியால் சுடப்படுவீர்கள்; ஜாக்கிரதை" என்று தொழிலாளர்களை போல்ஷ்விக்குகள் எச்சரிக்கை செய்தனர். ஆனால் குளிர்கால அரண்மனைக்கு ஊர்வலம் போவதை அவர்களால் நிறுத்த முடியவில்லை.

1905-ம் வருடம் ஜனவரி 9-ந்தேதியன்று அதிகாலையில், தொழிலாளர் அந்த ஜார் மன்னனின் அரண்மனைக்கு அணிவகுத்து சென்றனர். ஜார் அரசனுடைய படங்களையும், மாதா கோவில் கொடிகளையும் கையிலேந்தி, தங்கள் மனைவி பிள்ளைகளுடன் போனார்கள். போகும் போது வேத வாக்கியங்களை உச்சரித்தனர். அவர்கள் நிராயுதபாணிகள். ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு மேல் வீதிகளில் கூடினார்கள்.

இரண்டாவது நிக்கலஸ் என்று பெயர் படைத்த அந்த ஜார் அரசனிடமிருந்து அவர்கள் விநோதமான வரவேற்பைப் பெற்றனர். நிராயுதபாணிகளான தொழிலாளர்கள் மீது துப்பாக்கியால் சுடுவதற்கு அவன் உத்தரவு கொடுத்தான். அன்று ஜாருடைய துருப்புகளால் ஆயிரம் தொழிலாளருக்கு மேல் கொல்லப்பட்டனர். இரண்டாயிரம் பேருக்கு மேல் படுகாயம் அடைந்தனர். செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகர வீதிகள் தொழிலாளரின் இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டன.

(ஆதாரம்; சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் வரலாறு.)

இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்து இப்போது கிட்டத்தட்ட எண்பது ஆண்டுகள் முடிந்து விட்டன.

இந்த வரலாறுகளில் இருந்து பாடங்கற்றுக் கொள்ளாமல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்து **EPRLF** செந்தோழர்கள் நீண்ட புரட்சிகரப் பாதயாத்திரையொன்றினை தேவாலயத்துக்கு முன்பிருந்து நடத்தப் போய் அரசபடைகள் போராளிகளைக் கண்ணீர்ப்புகையடித்தே கலைத்துவிட்டார்கள்.

பிறகு, **EPRLF** தோழர்கள் வீட்டுக்கு வந்து கவிதை எழுதினார்கள்.

சஞ்சிகை: முழக்கம் (ஜூன் 83)

கவிதைத்தலைப்பு: ஒரு முடிவு செய்யப்பட்டு விட்டது.

கவிதையில் சில வரிகள்:

"ஓ......

நாங்கள் வெள்ளைக்கொடியும்
கையில் ஒரு
சமரச மனுவுமாக
சந்திக்க வந்தபோது
வெடிகுண்டுகளை வீசி
குரூரப்புன்னகை உதிர்த்தாய்
ஆம்
ஒரு முடிவு
செய்து விட்டோம்
நாங்கள்
வாழவேண்டுமானால்
போராட வேண்டும்."

**a red poem composed by a RED comrade after the long march of Eelam PAPER Revolutionists' Liberation Front.**

சிலருக்கு முடிவுகள் எடுக்க 80 ஆண்டுகால வரலாறும் போதாது போலிருக்கிறது! ●

## சில குறிப்புகள்

எமது புனித விடுதலை இயக்கத்தின் பெயரைக்களங்கப்படுத்தும் வகையில் சில சமூக விரோத சக்திகள் தமிழ் நாட்டில் செயற்பட்டு வருகின்றன.

● சமீபத்தில் கும்பகோணத்திலிருந்து சென்ற வாலிபர் கோஷ்டி ஒன்று பெங்களூர் சங்கபுரம் பகுதியில் ஒரு வங்கியைக் கொள்ளையடிக்க முயன்று பிடிபட்டபோது, விடுதலைப் புலிகளுக்குப் பணந்திரட்டவே தாம் இக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதாக இக்கோஷ்டி கூறியதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துக்கும் எமது இயக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நாம் அதிகாரபூர்வமாக அறிவிக்கிறோம்.

● தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணிக்கு அருகேயுள்ள பண்ணை வயல் கிராமத்தில் தட்சணாமூர்த்தி என்ற விவசாயியின் பாதுகாப்பில் "விடுதலைப் புலி" இளைஞர் ஒருவர் தஞ்சம் புகுந்தார் என்றும், ஒரு கோஷ்டியினர் வந்து அந்த இளைஞரைக் கடத்திச் செல்ல முயன்ற போது தட்சணாமூர்த்தி குறுக்கிடவே அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. இந்தக் கொலைச் சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த சம்பவத்தில் எமது விடுதலை இயக்கத்தின் பெயர் தவறாய்ப் பாவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொலைக்குக் காரணமாகவிருந்த சமூகவிரோதக் கும்பலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

● தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டுள்ள பிற இயக்கங்களை நாம் என்றுமே விமர்சிக்க முனைந்ததில்லை. ஆயினும் எமது இயக்கச் செயற்பாடுகள் குறித்து விஷமத்தனமான பிரச்சாரங்களை அவர்கள் முன்வைக்கும் போது அவற்றிற்குப் பதிலளித்தேயாக வேண்டிய தேவை எமக்கேற்படுகிறது. பிற இயக்கங்கள் எமது இயக்கச் செயற்பாடுகள் பற்றி விஷமத்தனமாகத் தங்கள் ஏடுகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும், சுவரொட்டிகளிலும் வெளியிட்ட கருத்துக்களுக்கு நாங்கள் முன் வைக்கும் பதில்களே இவை. நாமாகவே வலிந்து பிரயோகிக்கும் கண்டனங்களோ, வசைபாடல்களோ அல்ல. எனவே எமது இயக்கத்தைப் பற்றிய தேவையற்ற விஷமப் பிரச்சாரங்களை இனிமேலாவது நிறுத்திக் கொள்வது அவர்களுக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது. தொடர்ந்தும் இவர்களின் அர்த்தமற்ற பிரச்சாரங்களுக்கு பதில் எழுதிக் கொண்டிருக்க எங்களுக்கு அவகாசமில்லை. ●

**Moreover, he told me that they would have to learn to get used to the army in the northern province. "How?" I asked him. "Like we live with mosquitoes," he answered, laughing.**

வடமாகாணத்தில் இனிமேல் மக்கள் இராணுவப் படையினருடன் வாழப் பழக்கப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று அமிர்தலிங்கம் என்னிடம் கூறினார். ''எப்படி?'' என்று நான் அவரைக் கேட்டேன் அவர் சிரித்துக் கொண்டு சொன்னார்: ''நாங்கள் நுளம்புகளுடன் வாழவில்லையா? அதைப்போல'' —டேவிட் செல்போர்ன்



THE ILLUSTRATED WEEKLY OF INDIA

நீட்டிய துவக்குகளின் நெருக்குதலில்
ரோட்டுகள் தேடி ஒடுங்கும் பூச்சிகளாய்
மாண்டவர் தாமிங்கு மரணித்துடன் சீம்பாவிக்கிறோம்
கிடனிப் போன தென்னையர் சொல்கிறார்
"மழை காலத்தில் நுளம்புகளோடு
பழகிப் பழகிறது போல
படையினரோடும் பழகப்பழகுவோம்" என்று
ஏதோ எழுதிய பதிலை முன்னர் உதிர்த்தவர்
போல ரோக்கச் சிரித்த படி.
தெரியாமல் கேட்கிறேன் நண்ப,
நுளம்பின் கடியின் வலியா நமக்கெல்லாம்?
கொன்று போடும் கொடுமைகள் இங்கெலாம்
கொசுக்கடி போல்வதுதான் ஓ?
நடையிட்டு விரட்டுதலும் கடியுமா
கொசுக்களைப் போல் இக் கொடுமைகள்?
திலைவரும் சூழ்கின் சிறுமையும் சிறுமதியும்
இன்னும் இருந்தவாறோ.
—'நாது' கவிதையிலிருந்து.





# இது நவயுகம்! பொபி சாண்ட்ஸ் சிறைக்குள் இருந்து எழுதிய கவிதை

சுற்றிலும் பார்க்கிறேன்——
சித்திரவதையில் புதுமைகள்
வேதனைகள்
பாசாங்குகள்
நாகரிகம் முகிழ்க்கும்
எழுபத்தொன்பதின்
நவீன யுகத்தில் நாம்
வாழ்கிறோமாம்——
அவர்கள் சொல்கிறார்கள்!

இந்த நவீன யுகத்தில்தான்
பச்சை அரும்புகளின்
பட்டினிச் சாவுகள்!
ஏனென்று கேட்கவோ
எவருமேயில்லை!
அணிவதற்கு
ஆடைகளேயில்லாத
அந்தச்சிறுமிகள்
வெற்றுமேனியுடன்
இரவின் நெருப்பில்
எரிகுண்டு மழைகண்டு
அஞ்சி ஓடுகின்ற
அவலம்!

ஆளுங்கட்டிலிலே
அதிகாரக்குண்டர்கள்
பிள்ளைகள் கிண்டும்
புதைகுழிகளில்
பெற்றோரின் எலும்புகளே
சமாதியாகின்றன.
ரகசியப்பொலிஸார்
நடுநிசி நாயகர்கள்——
யாருங்காணுத்தனிமையிலே——
நிர்வாணமாக்கப்பட்ட
பெண்களின்
நரம்பில்
மின்சாரம்
பாய்ச்சும்
மிலேச்சர்கள்

சாக்கடை ஓரத்தில்
கறுப்பு மனிதன்
கிடக்கிறான்——
செத்துப்போய்
எங்கே——
எண்ணெய்

கரிய நிறத்தில் வழிந்தோடுகிறதோ
அங்கே——
சாலைகள் ரத்தத்தில் சிவக்கின்றன!
மனுக்குலத்தின் மீட்பர்
மண்ணிலே
மீட்சி இல்லாமலேயே
வாழ்ந்து மரித்தார்
அதிகார வர்க்கத்தின்——
வியாபாரச் சூதாடிகளின்——
அரசியல் தலைவர்களின்
சந்தோஷப் புன்னகைகளிலோ
அருவருக்கும் முடைநாற்றம்
தாயிழற்றோர்
நாளைய தினத்தில்
தாயின் கருவில்
ஜனனிப்பர்
ஆயினும்——
தனிமையில்
இந்தக்
கைதி
தன் கல்லறையிலிருந்து
குரல் எழுப்புவான்!

எதிரிப்படையணியை ஒளித்திருந்து தாக்கிச்சிதறடிக்கும் ஒரு சம்பவமானது அப்பகுதிக்கிராம மக்களுக்கு என்றுமில்லாத கிளர்ச்சியார்வத்தை உண்டுபண்ணி விடுகிறது. இப்படியான ஒரு இராணுவ நடவடிக்கை புதிய அங்கத்தவர்களைக் கவர்வது ஒரு புறமிருக்க கிராம வாசிகளுக்கும் ஒரு ஆழமான அரசியல் பாடத்தையும் புகட்டிவிடுகிறது. துருப்புகளை ஏற்றிச் செல்லும் ஒரு இராணுவ வாகனத்தை அழிப்பது அல்லது சித்திரவதையில் பெயர்பெற்ற ஒரு போலீஸ் அதிகாரிக்கு மரண தண்டனை அளிப்பது போன்ற ஒரு நடவடிக்கையானது ஆயிரம் சொற்பொழிவுகளைவிட அதிக வலிமை வாய்ந்த பிரச்சாரமாக அமைந்து விடுகிறது. இத்தகைய நடவடிக்கை மக்களுக்கு அடிப்படையான ஒரு உறுதிப்பாட்டைக் கொடுத்து விடுகிறது. அதாவது, புரட்சி வீர நடை போடத் தொடங்கியுள்ளது. எதிரியை வெற்றி கொள்வதுமுடியாத காரியமல்ல என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி விடுகிறது. இதற்குப் பின்னர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினால் மக்கள் செவிமடுப்பார்கள் என்பது திண்ணம். கொரில்லா வீரர்களும் தொடர்ந்து எதிரி மீது தாக்குதல்களை நடத்தி வந்தால் ஆயுதங்களைச் சேர்ப்பதோடு, அநுபவத்தையும் சேகரித்து, எதிரியின் இராணுவ பலத்தைப் படிப்படியாகக் குன்றச் செய்து, இராணுவத்தினரின் ஒழுங்கையும் உறுதிப்பாட்டையும் சீர்குலைத்து, நாடெங்கிலும் உள்ள தீவிரவாதிகளுக்கு ஒரு புதிய நம்பிக்கையைப் பிறப்பிக்க முடியும். இப்படியாக முதலில் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதிலேயே அரசியற் பிரச்சாரத்தின் தாக்கம் தங்கியிருக்கிறது.

இதிலிருந்து ஆயுதப் புரட்சி பற்றிய பிரச்சாரமோ அன்றி அரசியல் வேலைகளோ அவசியமில்லை என்று கொள்ளக்கூடாது.

——ரெஜி டெப்ரே




9-4-84இல் தகர்க்கப்பட்ட ஸ்ரீலங்கா ராணுவ ட்ரக்

தற்காப்பு யுத்தத்தின் தொடக்கத்தில் நமது ராணுவம் இளமையானதாக இருந்தது. அந்த ராணுவத்தில், வீர உணர்வு நிரம்பிய போதிலும் ராணுவத் தளவாடங்களும் அனுபவமும் அதிகாரிகளும் —— என்இதைப் போன்ற அனைத்து விஷயங்களுமே பற்றாக்குறையாகத்தான் இருந்தன.

அதேசமயம், எதிரியின் ராணுவமோ உலகில் பிரபல்யம் பெற்றிருந்தது. அவர்களி[illegible] படையும் விமானப்படையும் இருந்தன. அது மட்டுமின்றி பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவும்எதிரிக்கு இருந்தது.

இவ்வாறு நமது வலிமைக்கும் எதிரியின் வலிமைக்குமிடையே பெரிய இடைவெளி இருந்தது. இதனால்தான், நமது தற்காப்பு யுத்தம் வெட்டுக்கிளி யானையுடன் மோதுவதைப் போன்றது என்று சிலர் கருதினார்கள்.

பொருளாதார ரீதியில், நமது சொந்த நிலையில் நின்று, குறுகிய பார்வையுடன் நோக்கும்போது நிலைமை அப்படித்தான் தோன்றும். ஆம்; ஆகாய விமானங்களையும் பீரங்கிகளையும் மூங்கில் கழிகளைக் கொண்டே நாம் எதிர்த்துத் தாக்க வேண்டியிருந்தது.

ஆனால், மார்க்சிய-லெனினிசத் தத்துவத்தால் நடத்தப்படுகின்ற நமது கட்சி, நிகழ்காலத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கவில்லை. எதிர்காலத்தையும் முன்னோக்கிக் கண்டது. மக்களின், தேசத்தின் உணர்வின் மீதும் வலிமையின் மீதும் அது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தது.

அதனால்தான் மனசஞ்சலத்திற்குள்ளாகி, எதிர்காலத்தின் மீது நம்பிக்கை இழந்து நின்றவர்களுக்கு,

"ஆம்; இந்த வெட்டுக்கிளி யானையை எதிர்த்துப் போராடுகிறது."

"ஆனால், நாளை அந்த யானையின் குடல்கள் குத்திக் கிழிக்கப்படும்"

என்று நாம் தெளிவாகப் பிரகடனம் செய்தோம்.

காலனியாதிக்க "யானையின்" குடல்கள் கிழிக்கப்பட்டிருப்பதையும், நமது ராணுவம் வலிமைமிக்க வேங்கையாக வளர்ந்து நிற்பதையும் நடைமுறை வாழ்க்கை எடுத்துக் காட்டியிருக்கிறது.

——ஹோ-சி-மின்——